விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 03 திங்கட்கிழமை (19.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 305

### வடக்கு - கிழக்கிலுள்ள காணிகளை

## வெளிமாவட்ட சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிப்பதை தடுக்க வேண்டும்

### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கிலுள்ள காணிகளை வெளிமாவட்ட சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிப்பதை எப்படியாவது நாம் தடுக்க வேண்டும். இதற்காக ஒரு சட்டத்தரணிகள் குழுவை அமைத் ▶23

### கம்பஹாவிலுள்ள பாடசாலையில்

## உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவிக்கு கொரோனா

(கம்பஹா)

கம்பஹாவில் உள்ள பிரபலமான மகளிர் பாடசாலை ஒன்றின் பரீட்சை மையத்தில் உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவி ஒருவருக்கு கோவிட் - 19 தொற்றுறுதி ஆகியுள்ளது.

அவர் தற்போது கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனையில் சிகிச்சை ▶23

### ரிஷாத்தைத் தேடி

## கிழக்கிலும் சல்லடை



▶23

## மத்துகமவில் 5 பிக்குகளுக்கு கொரோனா

(கொழும்பு)

மத்துகமவில் உள்ள ஓவ்டிகல விகாரையின் தலைமை பிக்கு உள்ளிட்ட 5 பிக்குகள் கொரோனா தொற்றிற்கு உள்ளாகியுள்ளனர்.

இதன்படி, மத்து ▶23

### வெளிமாவட்டங்களுக்கான

## அநாவசியமான பயணங்களை தவிருங்கள்

### யாழ்.அரச அதிபர்

6ஆம் பக்கம் பார்க்க



### புங்குடுதீவு யுவதியை ஏற்றி வந்த

# பருத்தித்துறை பேருந்து நடத்துநருக்கு கொரோனா!




- 2ஆம் கட்ட பி.சி.ஆர் பரிசோதனையிலேயே தொற்று உறுதி.
- தொற்று உறுதி செய்யப்பட்டவர் தும்பளையைச் சேர்ந்தவர்.
- தொற்று மேலும் அதிகரிக்கலாம்.

*கொரோனாத் தொற்றுக்குள்ளான புங்குடுதீவைச் சேர்ந்த யுவதி பயணித்த பருத்தித்துறை சாலை பேருந்து நடத்துநருக்கு இரண்டாம் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

இம் மாதம் மூன்றாம் திகதி கொழும்பிலிருந்து பயணித்த மேற்படி புங்குடுதீவைச் சேர்ந்த யுவதி பருத்தித்துறை சாலை பேருந்திலும் பயணித்துள்ளார்.

இந்நிலையில், அவ் பஸ் வண்டியில் பயணித்தவர்கள், நடத்துநர், சாரதி உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு முதற் கட்டமாக செய்யப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் உறுதி செய்யப்படவில்லை.


இரண்டாம் கட்டமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை பெறப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வெளியிடப்பட்டது.

இதில் தும்பளையைச் சேர்ந்த பருத்தித்துறை சாலையின் நடத்துநருக்கு கொரொனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே வடமராட்சிப் பகுதியில் உள்ள மக்களை கடும் சுகாதார பாதுகாப்புடன் இருக்குமாறு சுகாதாரப பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(ஞா-60)

### வவுனியா - முருகனூர் பகுதியில்

## 4 கஞ்சா செடி மற்றும் துப்பாக்கி மீட்பு




(வவுனியா)

வவுனியா, முருகனூர் பகுதியில் நேற்று மாலை 6 அடி நீளமான கஞ்சா செடி நான்கு மீட்கப்பட்டதுடன், துப்பாக்கி ▶23

## 20ஐ நிறைவேற்றுவதற்கு கோட்டா கடும் பிரயத்தனம்

### ஆளும் கட்சி எம்.பிக்களுடன் இன்று சந்திப்பு



(கொழும்பு)

கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற் ▶23

### வடமராட்சிப் பகுதியில்

## பூச்சாடியில் கஞ்சாச் செடிகள்

### ஒருவர் கைது

8ஆம் பக்கம் பார்க்க

### வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட

## 3 பேருக்கு கொரோனா

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வடமாகாணத்தின் பல இடங் ▶24

## நேற்றும் 63 பேருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

கம்பஹா - மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையின் ஊழியரகளுடன் நெருங்கிப் பழகிய 63 பேருக்கு கொரோனாத் தொற்றிருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 13 பேர் தனிமைப்படுத்தல் மையங்களிலும் ஏனையோர் வெவ்வேறு இடங்களிலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் ▶24

### அடுத்த வாரம் மிகவும் முக்கியமானது

## தொற்றாளர்கள் மேலும் அதிகரிக்கும்!

### சவேந்திர சில்வா எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கொரோனா நோயாளிகள் பதிவாகி ▶24

# 31ஆவது நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
17
-
11
-
1944

இறை அருகில்
21
-
09
-
2020

## அமரர் இராசசேகரம் ஞானசுந்தரம்

( கட்டியண்ணா / கட்டிமேத்திரி )

பிள்ளையார் கோவிலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை

ஐயா! நினைத்தற்கரிய விதத்தில் சுயம்பானீர்!
பல்திறன்களையும் நயமாக மற்றோருக்கு போதித்தீர்!
அறிவிலி மொட்டையர் வரலாறுகளைப் பிதற்ற கண்கலங்கினீர்!
நடமாடும் கலைக் களஞ்சியமாய் நீரிருக்க - நாமோ
வெறுந்தாள்களாக ஏங்கி நிற்க - வல்லமை
தாராயோ என்றும் எமக்குளிருந்து!

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.10.2020) செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் வல்வை ஊறணி தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகளும் மதியபோசன நிகழ்வும் அன்று காலை 10.00 மணி முதல் 18/26, சுண்டிக்குளம் சந்தி அருகிலுள்ள அன்னாரின் தற்காலிக வீட்டில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்தி பெறவேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (C-545)

குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

# துயர் பகிர்கின்றோம்



அமரர்

## கந்தையா இராசரத்தினம்

( ஓய்வுநிலை கணக்காளர் )

நேற்று (18.10.2020)
ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த
அன்பான சித்தப்பாவே அருமை மாமாவே
அறிவான அம்மப்பா, அப்பப்பாவே தங்கள்
பிரிவறிந்து தாங்காமல் வாடுகின்றோம்.
என்றும் தங்கள் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்தனை
செய்கின்றோம். துயரில் துவழும் குடும்பத்தாருக்கு
எமது ஆறுதல்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (4411)

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுடன்
நவரத்தினம் ஆசிரியர் குடும்பம்

# கண்ணீர்க் காணிக்கை



அமரர்

## கந்தையா இராசரத்தினம்

( ஓய்வுநிலை கணக்காளர் )

எங்கள் அன்பிற்குரிய மாமா
அமரர் **கந்தையா இராசரத்தினம்** அவர்கள்
நேற்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை
இறைபதமடைந்த செய்திகேட்டு துயரடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (4410)

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

பிரிவால் துயருறும்
திரு. நாகேந்திரம் கணேசராஜா (அதிபர் )
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## இராஜரட்ணம் தயாநிதி (சந்திரன்)

[ உரிமையாளர் – சந்திரா ஸ்ரோஸ், ஆனைக்கோட்டை ]

வண் - வட. மேற்கு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கேணியடி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் தயாநிதி (சந்திரன்) நேற்று (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் புஷ்பராணியின் அன்புக் கணவரும் ஜதிசங்கர், காலஞ்சென்ற கஜேந்திரன் (ராஜா) மற்றும் துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவயோகநாயகி, அருளானந்தன் மற்றும் தையல்நாயகி, காலஞ்சென்ற தில்லைநாயகி மற்றும் கருணாநிதி, மகாலட்சுமி, காலஞ்சென்ற குணானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராஜகுலசேகரம் மற்றும் யோகராணி, காலஞ்சென்ற தர்மகுலசேகரம் மற்றும் சந்திரகுலசேகரம், சந்திரபவானி, ஞானகுலசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2020) திங்கட்கிழமை மதியம் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (4413)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
20
–
04
–
1950



இறப்பு
17
–
10
–
2020

## கந்தசாமி சின்னராசா

வடமராட்சி, சித்தம்பாதி, கரவெட்டியைச் சேர்ந்த கந்தசாமி சின்னராசா நேற்று முன்தினம் (17.10.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் (மலர்) அன்புக் கணவரும் லாகூசன் (லவன்-கனடா), தனு, லயூரன் (லஜா), லனுசியா, மாதுளா ஆகியோரின் அன்புத் தந்தையும் டிசானா, டனிசிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் சந்திரகுமார், ஜெகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.10.2020) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரணவாய் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-543)

சித்தம்பாதி,
கரணவாய், கரவெட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்

# நீதியரசர் தலைமையிலான குழுவின் அறிக்கையினை மாற்றும் அளவிற்கு நான் முட்டாள் அல்ல

## ஆணைக்குழு முன்பு மைத்திரி சாட்சியம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்கு தாம் நியமித்த மலல்கொட குழுவின் அறிக்கையை மாற்ற முடியும் என தாம் கூறியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நான்காவது நாளாகவும் நேற்று முன்தினம் சாட்சியமளித்த போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை அவ்வாறு மாற்றும் அளவிற்கு தாம் முட்டாள் தனமான நிலைக்கு வீழ்ச்சியடையவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குழு நியமிக்கப்படுகையில் அது தொடர்பான விடயங்களை, அப்போதைய ஜனாதிபதி செயலாளர் உதய செனவிரத்னவே முன்னெடுத்தார்.

இதேவேளை, கடும்போக்கு வாதம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்த அறிக்கைக்கு அமைய, அதனைத் தடுப்பதற்கு தாம் தேவையான ஆலோசனை மற்றும் உத்தரவை வழங்கியமைக்கான எழுத்து மூல ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்கான இயலுமை தற்போது இல்லை எனவும், அந்தக் கலந்துரையாடல்களுடன் தொடர்புடைய ஆவணம் ஜனாதிபதி செயலகத்திலுள்ளதாக தாம் ஊகிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையிலும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி என்ற வகையிலும் நீங்கள் பிறப்பித்த உத்தரவு மற்றும் அறிவுறுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டதா? என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இதன்போது வினவினார். தாம் உத்தரவிட்டிருந்த போதிலும், கீழ் நிலை பதவிகளிலுள்ள அதிகாரிகள் அவற்றை உரியவாறு நடைமுறைப்படுத்தவில்லை எனத் தெரிவித்தார்.

நடைமுறைப்படுத்தப்படாமை குறித்து, முறையான தெளிவுபடுத்தல்கள் இடம்பெறவில்லை எனத் தென்படுகின்றதா என மேலதிக சொலிசிட்டர்ஜெனரல் இதன்போது வினவினார்.

அதற்கு,நான் உரியவாறு அறிவுறுத்தினேன். கீழ் நிலை பதவிகளிலுள்ள அதிகாரிகள் அவற்றை நடைமுறைப்படுத்தாத பிரச்சினையுள்ளது. அது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இவ்வாறான நிலைமையை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டிருக்காது எனவும் அவர் சாட்சியமளித்தார். (ஜ-4)

## ‘20’ தனிப்பட்ட தரப்பின் யோசனையல்ல



(கொழும்பு)

அரசியலமைப்பின்20 ஆவது திருத்தம் தனிப்பட்ட தரப்பின் யோசனை அல்ல. ஆளும் தரப்பின் அனைத்து உறுப்பினர்களின்யோசனைகளுக்கு அமையவே உருவாக்கப்பட்டது.

எனவே 20 ஆவது திருத்தால் அரசாங்கத்திற்குள் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின்19 ஆவது திருத்தம் நாட்டு நலன் கருதி கொண்டு வரப்படவில்லை. அரசியல் பழிவாங்கல் உள்ளிட்ட குறுகிய நோக்கங்களை பின்னணியாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. 20 ஆவது திருத்தம் ஒரு வார காலத்திற்குள் உருவாக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் வழங்கிய வாக்குறுதியை நம்பி அப்போதைய எதிர்க்கட்சியினர் 19ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கினார்கள்.

எவரது வாக்குறுதியின்மீதும் நம்பிக்கை கொள்ள முடியாத காரணத்தினால் நான் மாத்திரம் தந்துணிவுடன் 19ஆவது திருத்தத்துக்கு எதிராக வாக்களித்தேன். 19 வது திருத்தம் நல்லாட்சியின் சாபக்கேடு என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விமர்சிக்கும் அளவிற்கு அது தாக்கத்தை ஏற்படுத்தியது.

நல்லாட்சி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு 19ஆவது திருத்தமே மூலகாரணியாகும். இத்திருத்தத்தை இரத்து செய்யாமல் அரச நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதற்காகவே 20 ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது என தெரிவித்தார். (ஜ-4)

## ‘20’ற்கு இ.தொ.கா. ஆதரவு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கும் என்று அக்கட்சியின் நிதிச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட பூண்டுலோயா ஹெரோ தோட்ட கீழ்ப்பிரிவு பாதையை காப்பெற் பாதையாக மாற்றியமைப் பதற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.



"19ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் எனக்கோரியே நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்தார்கள். அதனை நிறைவேற்றுவதற்காகவே 20ஆவது திருத்தச்சட்டமூலம் கொண்டு வரப்படுகின்றது. அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## 2781 குடும்பங்களுக்கு சுய தனிமைப்படுத்தல் உத்தரவு



(கொழும்பு)

கம்பஹாவில் 2781 குடும்பங்களை சுய தனிமைப்படுத்தலை முன்னெடுக்குமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இவர்களில் 876 பேர் மினுவாங்கொடையை சேர்ந்தவர்கள் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உணவு மற்றும் மருந்துகளை விநியோகிப்பதற்கு 5 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் அத்தியாவசியப் பொருட்களையும் வழங்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உத்தரவிட்டுள்ளார். (ஜ-4)

## ரிசாத்தை கைது செய்ய முடியாததையிட்டு சி.ஐ.டியினர் வெட்கப்பட வேண்டும்



(கொழும்பு)

ரிசாத் பதியுதீனை கைது செய்யமுடியாததையிட்டு சி.ஐ.டியினர் வெட்கப்படவேண்டும் என இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

அதேவேளை, அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் 22 ஆம் திகதி நிச்சயம் நிறை வேற்றப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

தலவாக்கலையில் அமைந்துள்ள தேயிலை ஆராய்ச்சி நிலையத்துக்கு நேற்று கண்காணிப்பு பயணமொன்ற மேற்கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டில் தரமான தேயிலை உற்பத்திக்கும், ‘சிலோன் டீ’ என்ற நாமத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் போதுமானளவு ஆலோசனைகளையும், ஆய்வு உதவிகளையும் குறித்த நிறுவனம் வழங்கியுள்ளது.


ரிசாத் பதியுதீனை கைது செய்யமுடியாததையிட்டு சி.ஐ.டியினர் வெட்கப்படவேண்டும்" எனவும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# சுற்றாடல் அமைச்சரின் விசேட எச்சரிக்கை

(கொழும்பு)

சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிப்பவர்களுக்கு கடுமையான தண்டனை பெற்றுக் கொடுக்கும் வகையில் சுற்றுச் சூழல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.



பாணந்துறை பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சுற்றுச்சூழல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மற்றுமோர் கொரோனா வைத்தியசாலை

(கொழும்பு)

கொவிட்-19 தொற்று நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக தங்கொட்டுவ மாவட்ட வைத்தியசாலையை பயன்படுத்துவதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி கொரோனா தொற்றாளர்களை குறித்த வைத்தியசாலையில் அனுமதிப்பது தொடர்பான பணிகள்நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. (ஜ)

# ஆடை ஏற்றுமதி வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

நடப்பாண்டின் முதல் ஒன்பது மாதங்களில், நாட்டின் ஆடை ஏற்றுமதி வருமானம் 22 வீதம் குறைந்து 3.1 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் ஜனவரி முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியில் பதிவாகிய மிகக் குறைந்த ஏற்றுமதி வருமானம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆடை ஏற்றுமதியில் 3.9 அமெரிக்க டொலர் என்ற அதிகூடிய வருமானம் கடந்த 2019ஆம் ஆண்டு பதிவாகியிருந்தது.

இலங்கையில் இருந்து அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதியில் 22.15 வீதம் மற்றும் 1.4 பில்லியன் டொலரும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதியில் 21.36 வீதம் மற்றும் 1.3 பில்லியன் அமெரிக்க டொலரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நடப்பாண்டில் ஆடை ஏற்றுமதி வீழ்ச்சிக்கு உலக நாடுகளில் பரவியுள்ள கொரோனா வைரஸ் பெருந்தோற்றே பிரதான காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சுகாதார பகுதியினால் வழக்குத் தாக்கல்

(குப்பிழான்)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 14 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் சனிக்கிழமை வரை டெங்கு நோய் தொடர்பான களத் தரிசிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இக் களத்தரிசிப்பு நடவடிக்கையை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம் பொலிஸார் இணைந்து மேற்கொண்டனர்.

மேற்படி களத் தரிசிப்பின் போது டெங்கு நுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருந்த திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு குடியிருப்பாளர்கள் உட்பட மூவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (5-4-18)

# சட்டவிரோத மதுபான உற்பத்தி இரு பெண்கள் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் தயாரித்த சீன பெண்கள் இருவர் உள்ளிட்ட சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடர்மாடி குடியிருப்பு தொகுதியில் உள்ள வீட்டில் நேற்று ஞாயிற்றுக் கிழமை சட்டவிரோத மதுபான உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட விசாரணைகளின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் ம்துபான உற்பத்திக்காக பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றினர். கொள்ளுப்பிட்டி பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சஜித் வீட்டில் றிசாத் கண்டுபிடித்த நிமல் லான்சா

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அல்லது அவருக்கு ஆதரவு வழங்கும் நபர் ஒருவரின் வீட்டில் றிசாத் பதியுதீன் மறைந்திருக்கக்கூடும் என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட பூண்டுலோயா ஹெரோ தோட்ட கீழ்ப்பிரிவு பாதையை காப்பெற் பாதையாக மாற்றியமைப்பதற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"றிசாத் பதியுதீன் உடனடியாக கைது செய்யப்படவேண்டும். அவர் அங்கம் வகிக்கும் கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸவுடனேயே அவர் கலந்துரையாடியும் உள்ளார்.




எனவே, றிசாத் இருக்கும் இடம் சஜித்துக்கு தெரியும். கூடியவிரைவில் றிசாத்தை ஒப்படைக்குமாறு கோருகின்றோம்.

20 ஐ நிறைவேற்றுவதற்கு றிசாத்தின் ஒத்துழைப்பு தேவையில்லை. ஏனெனில் எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. எனவே, 22 ஆம் திகதி இரவு '20' ஆவது திருத்தச்சட்ட மூலம் நிச்சயம் நிறைவேறும். 20 நிறைவேற்றப்படும் என்பது நாட்டு மக்களுக்கு நாம் வழங்கிய உறுதிமொழியாகும். அந்த உறுதிமொழியை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

றிசாத் பதியுதீன் சஜித் பிரேமதாஸ அல்லது அவருக்கு ஆதரவு வழங்கும் ஒருவரின் வீட்டில் மறைந்திருக்கக்கூடும் என்றே நாம் சந்தேகிக்கின்றோம்" எனவே அவர் விரைவில் கைது செய்யப்படுவார் என அமைச்சர் தெரிவித்தார். (ஜ-4)

# குளியாப்பிட்டியில் 11 பேருக்கு கொரோனா 4 கிராமங்களுக்கு பயணக் கட்டுப்பாடு



(கொழும்பு)

குருநாகல்- குளியாப்பிட்டியில் 11 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் நான்கு கிராமங்களுக்கு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கயியால, ஊருபிடிய, என்னருவ மற்றும் பல்லேவல ஆகிய நான்கு கிராமங்களுக்கே இவ்வாறு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

குளியாப்பிட்டியில் அமைந்துள்ள தேவஸ்தானம் ஒன்றில் கடந்த 2ஆம் திகதி திருமண நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து, மணமகனுக்கு கடந்த 12ஆம் திகதி வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.


அதனைத் தொடர்ந்து குறித்த திருமண நிகழ்வில் பங்கேற்ற மேலும் 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

தொடர்ந்து அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 11 பேருக்கு நேற்று முன்தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



**ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினரும், சூராவத்தை இளைஞர்களும் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏழாலை தெற்கிலுள்ள தனியார் கட்டடமொன்றில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவின் பங்களிப்புடன் நடைபெற்றது.**

(படம்-ரவிசாந்)



# சோலை வன்னேரிக்குளம்
# திருவருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
## புனராவர்த்தன ஏக குண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் பெருவிழா விஞ்ஞாபனம் - (2020)

### அம்பிகை அடியார்களே!

சீரும் திருவும் பொழியும் ஈழமணி திருநாட்டிலே வடபால் நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமைந்து நெல்வயல்களும் சூழப்பட்டு வரலாற்று புகழ் பெற்ற பன்னெடுங்காலமாக புளிவிருட்சத்தின் கீழே அமர்ந்து அடியவர்களை தனது கருணைகளாலும் அன்பாலும் ஈர்த்து அடியவர்களுக்கு அருள் புரிகின்ற சோலை ஸ்ரீ முத்துமாரியம்பாளுக்கு அழகிய கட்டிட நிர்மாணத்துடன் கண்கவர் வர்ண வேலைப்பாடுகள் ஒருங்கே அமைய புதிதாக கட்டப்பட்ட ஆலய மஹாகும்பாபிஷேக பெருவிழா எதிர் வரும் ஐப்பசி மாதம் 7ம் நாள் ( 23.10.2020) வெள்ளிக்கிழமை உத்திராடம் நட்சத்திரத்திலும் சப்தமி திதியும் விருச்சிகம் லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்தமாகிய காலை 07.47 மணிமுதல் 09.45 மணி வரையுள்ள சுப வேளையில், பிள்ளையார், அம்பாள், தம்பப்பிள்ளையார், சிம்மம், பலிபீடம், சிவன், முருகன், காளி, நாகதம்பிரான், வைரவர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற அம்பாள் திருவருள் கைகூடியுள்ளது அனைத்து அடியார்களும் வருகை தந்து திருவருட்கடாட்சத்தை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

### கிரியா கால நிகழ்வுகள் விபரம்

ஐப்பசி மாதம் 3ம் நாள் (19.10.2020) திங்கட்கிழமை மாலை 5மணிக்கு மஹாகணபதி பூஜை விநாயக வழிப்பாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி ஐப்பசி 4ம் நாள் (20.10.2020) செவ்வாய்க்கிழமை காலை 09.30 மணிக்கு விநாயகர் வழிப்பாட்டுடன் பூர்வாங்கக் கிரியைகள் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்தாரணம் விஷேச பூஜை நடைபெறும் ஐப்பசி 5ம் நாள் (21.10.2020) புதன்கிழமை காலை 09மணிக்கு கணபதி வழிபாடு விசேடபூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து தைலாப்பியம் (எண்ணெய்க்காப்பு) ஆரம்பமாகி தொடர்ந்து மறுநாள் (22.10.2020) வியாழக்கிழமை மாலை 4மணிவரை நடைபெறும்.மாலை5.30மணிக்கு கணபதி பூஜை விஷேட திரவிய ஹோமம் விஷேச பூஜைகள்.ஐப்பசி மாதம் 7ம் நாள் (23.10.2020) வெள்ளிக்கிழமை காலை 06மணிக்கு விநாயகர் வழிபாடு விஷேச பூஜைகள் தீபாராதனை வேதபாராயணம் திருமுறை ஓதல் என்பன நடைபெற்று மங்கள வாத்தியம் சகிதம் பிரதான கும்பம் வீதி வலம் வந்து குறித்த சுபமூகூர்த்தத்தில் அருள்புரியும் சோலை அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இனிதே மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மஹா அபிஷேகம் எஜமான் அபிஷேகம் விஷேட பூஜைகள் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) விபூதி பிரசாதம் வழங்கப்பட்டு கும்பாபிஷேகம் இனிதே நிறைவு பெறும்.

### குருமார் விபரம்

கும்பாபிஷேக நெறியாளர்
பிரம்மஸ்ரீ **பால.பாலச்சந்திரசர்மா**
ஸ்கந்தபுரம் ஸ்ரீமுருகன் வேதஸ்தானம்

யாகசம்ரட்சகர்
பிரம்மஸ்ரீ **மு.கஜன்சர்மா** (வவுனியா)
பிரம்மஸ்ரீ **S.சரத்சர்மா** (யாழ்ப்பாணம்)

பூ அலங்காரம்
**S.பாலமுரளி** (செல்வம்)
திருவையாறு, கிளிநொச்சி

விக்கிரக அமைப்பு
**ஜெ.சிவநாதன்** (காந்திக்கிராமம், கோணாவில்)

வர்ண வேலைகள்
டிலக்ஸ் ஆட்ஸ் (பருத்தித்துறை)

கதவு வேலை
திரு.**ம.பாலசுதன்**
வன்னேரிக்குளம்

மின் இணைப்பு
திரு.**பா.சுரேஸ்குமார்**
ஆனைவிழுந்தான்குளம்.

கும்பாபிஷேக குருமார்கள்
கிரியாபூஷணம் கிரியா வித்தகர் ஆகமப்பிரவீனா
**ஜெக ஜெகதீஸ்வரக்குருக்கள்**
முருகன் தேவஸ்தானம்,குமரபுரம்,பரந்தன்

ஐயப்பன் குருசாமி
சிவஸ்ரீ **கு.விபுலானந்தக் குருக்கள்**
ஐயப்பன் ஆலயம்,செல்வாநகர், கிளிநொச்சி.
**இ.திருக்குமரன்** ஐயா, முருகன் ஆலயம்,வன்னேரிக்குளம்

பாகசாலை
திரு.S.**நிருபன்ஐயா**, யாழ்ப்பாணம்.

கும்பாபிஷேக தலைவர்
திரு.**பசுபதி.நடேசலிங்கம்** (அதிபர்)
வன்னேரிக்குளம் மகா வித்தியாலம்

கிரியா பூஷணம்
தேசியமாமணி கிரியா சிரோன்மணி
**ஜெக.ஜெகந்தக் குருக்கள்**
கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தானம்

சர்வசாதகர்
இளம்சுடர் பிரம்மஸ்ரீ **ஜெக.ஜெகதீபனசர்மா**
கிருஸ்ணர் தேவஸ்தானம் (கிளிநொச்சி)

சிறப்பு கட்டட நிர்மாணம்
**தி.காண்டீபன்** குழுவினர்,ஆனந்தநகர், கிளிநொச்சி.

மங்கள வாத்தியங்கள்
இளம் தவிலிசை தென்றல்
**லோ.வேணுகாந்தன்** குழுவினர், ஸ்கந்தபுரம்.

கலசங்கள் அமைப்பு
சிற்பசிகாமணி **இ.சுபதரன்**
அம்பலபெருமாள் சந்தி, அக்கராயன், கிளிநொச்சி.

ஒலி, ஒளி அமைப்பு
ஆலயம்

குறிப்பு: அம்பாள் கிரியைகளில் கலந்து கொண்டு அபிஷேக திரவியம் பால், இளநீர், தயிர், பூக்கள், பூமாலைகள், வழங்கி அம்பாளின் திருவருளை பெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் 12 நாட்கள் நடைபெறும் மண்டலாபிஷேகத்திலும் கலந்து கொள்வதோடு 12ம் நாளாகிய மண்டல பூர்த்தியன்று அஸ்டோதரசதசங்காபிஷேகம் (108 சங்குகள்) நடைபெறும் அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் பேரருளைப்பெற்றுய்வோம்.

விசேட குறிப்பு: சுகாதார ஆலோசனைக்கு இணங்க இன்றைய கால சூழனை - 19 நிலைக்கேற்ப சுகாதார கட்டுப்பாட்டுக்கு ஏற்றவாறு முகக்கவசம் அணிதல் சமூக இடைவெளி பேணல் கைகால் சுத்தம் பேணுதல் போன்றவற்றை கடைப்பிடித்து ஆலய பரிபாலன சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு

அருள் மிகு சோலை முத்துமாரியம்மாள் ஆலயம்
வன்னேரிக்குளம்

இங்ஙனம்
ஆலய தர்மகர்த்தா மற்றும்
அமரரான சுந்தரம் ஐயா, காமாட்சி அம்மா அவர்களின் ஆசியுடன்
அவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள், சகோதர குடும்பத்தினர்.

தொ.இல:
0776473691

(4408)

# அநாவசிய பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்

## யாழ்.அரச அதிபர் பொதுமக்களுக்கு அறிவுறுத்து



**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கான அநாவசியமாக பயணிப்பதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு புங்குடுதீவு முடக்க நிலைமை வெகு விரைவில் நீக்கப்படும் எனவும் யாழ்.அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் தற்போதைய கொரோணாநிலைமைகள் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மகேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது கொரோணா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. இருந்தபோதிலும் எந்தநேரமும் தொற்று எந்த வழியிலும் ஏற்படலாம் என்ற அச்ச நிலைமை காணப்படுகின்றது.

தற்போதைய நிலவரப்படி யாழ்.மாவட்டத்தை பொறுத்த வரை நேற்று வரை புங்குடுதீவு தவிர்ந்த 468 குடும்பங்களைச் சேர்ந்த 1055 நபர்களை தனிமைப்படுத்தியிருக்கின்றோம். இந்த எண்ணிக்கை சற்று குறைவடைந்துள்ளது.

புங்குடுதீவுப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக முடக்கம் பி.சி.ஆர்.பரிசோதனையின் இறுதிப் பெறுபேறு கிடைத்த பின்னர் அதனை நீக்குவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேநேரம் க.பொ.த உயர்தர பரீட்சைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் எந்தவித தடையுமின்றி வழமைபோல் இடம்பெற்று வருகிறது. அதற்குரிய ஏற்பாடுகள் சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போதைய கொரோனா நிலைமையில் யாழ்.மாவட்ட மக்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் போன்ற அறிவுறுத்தல்கள் சுகாதார பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அநாவசியமற்ற தேவையற்ற பயணங்களை பெரும்பாலும் தவிர்ப்பது மிகவும் நல்லது.

பொதுமக்கள்கூடுமானவரை அரச அலுவலகங்களுக்குச் செல்லாது தொலைபேசி வழியாகவோ அல்லது இணைய மூலமோ தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வது மிகவும் நல்லது. அவசர தேவையேற்படின் மாத்திரமே சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நேரில் சென்றுபெற்றுக்கொள்ளவும்.

இலங்கையில் தற்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கொரோனா வைத்தியசாலை அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது.

அந்தவகையிலே யாழ்ப்பாணத்தில் மருதங்கேணி வைத்தியசாலை தற்போது கொரோனா வைத்தியசாலையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, அதே நேரத்தில் அந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு தொடர்ந்து இயங்கும் தேவை ஏற்படின் மாத்திரமே அங்கே கொரோனா நோயாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

அத்தோடு அந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொற்று உறுதியானவர்கள் உடனடியாக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார்கள்.

எதிர்பாராத நிலைமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் அந்த வைத்தியசாலையினை பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.(5-4)

## திருடன் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் வீடு உடைத்த திருடன் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டி சந்தி பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குளப்பிட்டி சந்திக்கு அருகாமையில் உள்ள வீட்டின் கதவினை உடைக்க முற்பட்ட போது திருடனை அப்பகுதி மக்கள் கையும் மெய்யுமாக பிடித்துள்ளனர்.

குறித்த திருடன், மண் அள்ளும் சவல் மூலம் வீட்டின் கதவின் பூட்டை உடைத்து வீட்டிற்குள் நுழையும் போது, அயலவர்கள் மற்றும் வழிப்போக்கர்கள் திருடனை மடக்கிப் பிடித்து எச்சரித்த பின் விடுவித்தனர்.

ஆனாலும், இந்தத் திருடன் பல சந்தர்ப்பங்களில் பொலிஸாரினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டவர் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (5-4-101)


## சுகாதார முறைகளைப் பின்பற்றாத திருமண மண்டபத்திற்கு சீல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் திருமண மண்டபம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் மறு அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டது.

குறித்த மண்டபத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வின் போது சமூக இடைவெளி பின்பற்றப்படாமை, முகக்கவசம் அணியாமை மற்றும் அனுமதியளிக்கப்பட்ட விருந்தினர்கள் எண்ணிக்கையை விட அதிகளவான விருந்தினர்கள் மண்டபத்திற்கு சமூகமளித்தமை ஆகிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத காரணங்களால் மண்டபம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகர சபை பொதுச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (5-4-30)

## ஷெல் உதிரிப்பாகங்கள் மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மறவன் புலோ கிழக்கு பகுதியில் உள்ள கிணறொன்றில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மோட்டார் ஷெல்களின் உதிரிப்பாகங்கள் (பியூஸ்) மீட்கப்பட்டுள்ளன.

கிணற்றினை ஆழப்படுத்தும் போதே குறித்த 12 பியூஸ்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஷெல்லின் உதிரிப்பாகங்களை சாவகச்சேரி பொலிஸார் மீட்டுள்ளனர். (5-4-30)



**கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டு மைதான நுழைவாயிலும், சிறுவர் விளையாட்டு முற்றமும் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு நேற்று ஞானபாஸ்கரோதய சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.**

## நடைபாதை வியாபாரத்தை தடை செய்யத்தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை நடைபாதைப்புடைவைவியாபாரத்தை எதிர்வரும் தை மாதத்திலிருந்து முற்றாகத் தடை செய்யத் தீர்மானித்துள்ளது. அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே சபை இம்முடிவை எடுத்தது.


சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்று வருகின்ற துணி வியாபாரம் தொடர்பாக அண்மைக்காலமாக சாவகச்சேரி நகரசபைக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறிப்பாக குறித்த இவ்விடயம் தொடர்பாக சாவகச்சேரி நகர சபையில் ஆராய்ந்த பின்னர் எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதியிலிருந்து நடைபாதை புடைவை வியாபாரத்தை சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் முற்றாகத் தடை செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கொரோனா அச்ச நிலைமை இல்லாவிடின் பண்டிகைக் காலங்களில் நகரசபையால் ஒதுக்கப்படும் இடங்களில் நடைபாதை புடைவை வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-30)

# தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகம் திறப்பு





படங்கள்:- ஐ.சிவசாந்தன்





தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தை சம்பிரதாய பூர்வமாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாரா ளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்தார். பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்ததுடன், அலுவ லகத்தினை நாடாவெட்டி திறந்து வைத்தார். (ஜ-33-101)

## 5000 ரூபா மானியம்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள வருமானத்தை இழந்தவர்களுக்காக 5000 ரூபா மானியம் வழங்குவதற்காக அரசு பணம் ஒதுக்கியுள்ளது.

அதற்காக 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை முதல் இந்தத் தொகை வழங்கப்படவுள்ளது. (ஜ-4)

## கொரோனா சிகிச்சைக்கு 49 கட்டில்கள் மாத்திரமே உள்ளன

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக வைத்தியசாலைகளில் எஞ்சியுள்ள படுக்கைகள் தொடர்பான விபரங்களை கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு நிலையம் வெளியிட்டுள்ளது.

மேலும் அவற்றுள் நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றுக்குச் சிகிச்சை அளிக்கப்படும் வைத்தியசாலைகளில் 49 படுக்கைகள் மாத்திரம் எஞ்சியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை மினுவாங்கொடை கொத்தணிப் பரவலில் சிக்கிய எந்தவொரு கொரோனாத் தொற்றாளர்களும் இதுவரை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்படவில்லை என்றும் நிலையம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

வாழ்த்துகின்றோம்



60 வது பிறந்தநாளில்
(19.10.2020)
மார்க்கண்டு விஜயகுமார்
(மின்னியலாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
“வந்த கஷ்டங்கள் எல்லாம்
பனிபோல தூர விலகி
மகிழ்ச்சி என்ற ஒன்றில்
ஒளி வீசட்டும்
தங்களின் எதிர்காலம் சிறப்பாக
அமைய உங்களை இந்நாளில்
மனதார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அம்மா, மனைவி, பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

## கொழும்பு வைத்தியசாலையின் இரண்டு அறைகளுக்கு பூட்டு



(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இரண்டு நோயாளிகள் அறைகளுக்குள் நோயாளிகளை இணைத்துக்கொள்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 34 மற்றும் 36ஆம் இலக்க அறைகளே இவ்வாறு மூடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-4)

## இரண்டு கோடி பெறுமதியான

# மணலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கேரளக் கஞ்சா மன்னார் பொலிஸாரால் மீட்பு

(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி,ஓலைத் தொடுவாய் கடற்கரை பகுதியை அண்டிய காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகுதி கேரளக் கஞ்சாப் பொதிகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கடத்திவரப்பட்ட நிலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கேரளக் கஞ்சா 200 கிலோ 825 கிராம் எடை கொண்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர் வழங்கிய தகவலின் அடிப்படையில், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தனின் வழிநடத்தலின் கீழ் மன்னார் பொலிஸ் ஊழல் தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.டி.வீரசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் ஓலைத் தொடுவாய் கடற்கரை பகுதியை அண்டிய காட்டுப்பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது 94 பொதிகளில் பொதி செய்யப்பட்ட 200 கிலோ 825 கிராம் எடை கொண்ட கேரளக் கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர். குறித்த கேரளக் கஞ்சா பொதிகள் சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியானது என தெரிய வந்துள்ளது. சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



இதேவேளை இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கடத்தி வரப்பட்ட நிலையில் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி சட்டவிரோத மாத்திரைகளை நேற்று முன்தினம் மாலை திருக்கேதீஸ்வரம் சந்தியில் வைத்து பொலிஸார் மீட்டுள்ளதோடு மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட மாத்திரைகள் பல இலட்சம் ரூபாய் பெறுமதியானவை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-4-285)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 55 பேர் சொந்த இடங்களுக்கு

(நெளுக்குளம்)

வவுனியா பம்பைமடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டு தங்கவைக்கப்பட்டிருந்த 55 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து நேற்று சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டிற்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்று நாட்டிற்கு திரும்ப முடியாமலிருந்த டுபாய், ஜோர்தான் நாடுகளிலிருந்து 105 பேர் அண்மையில் இலங்கைக்கு விஷேட விமானத்தில் அழைத்து வரப்பட்டு பம்பைமடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் 55 பேர் தங்களது தனிமைப்படுத்தலை நிறைவு செய்து சொந்த இடங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த தனிமைப்படுத்தல் நிலையத்தில் வெளி நாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்களில் 50 பேர் நேற்று முன்தினம் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(5-4-299)

# 11 இலட்சம் பெறுமதியான கடலட்டைகள் மீட்பு



(மன்னார்)

மன்னார் புதுக்குடியிருப்பு நூறு வீட்டுத்திட்டம் பகுதியில் கடத்த தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 335 கிலோ கிராம் எடை கொண்ட கடலட்டைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் மன்னார் மாவட்ட பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல்ல வீரசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மாவட்ட குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரி குமார பல்லே வல மற்றும் உதவி பொலிஸ் பரிசோதகர் சாமர ராஜபக்ஸ தலைமையிலான மன்னார் மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவினரின் தலைமையிலான குழுவினரே மேற்படி புதுக்குடியிருப்பு பகுதியில் புகையிரத கடவைக்கு அருகில் கடத்தி செல்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கடலட்டைகளை கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி கைப்பற்றப்பட்ட கடலட்டைகள் அனைத்தும் மேலதிக விசாரணையின் பின் மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்க மேற்கொள்ளபட்டுள்ளதுடன் கைப்பற்றப்பட்ட கடலட்டைக்கள் சுமார் 11 இலட்சத்து75 ஆயிரம் ரூபாய் பெறுமதியானவை என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# பூச்சாடியில் கஞ்சாச்செடி ஒருவர் கைது

(முறிகண்டி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை பகுதியில் சூட்சுமமான முறையில் கஞ்சா செடிகள் வளர்க்கப்படுவதாக பளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கிணங்க நேற்றுமுன்தினம் குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போது வீடு ஒன்றில் பூச்சாடி யில் சூட்சுமமான 15 இற்கும் மேற்பட்ட கஞ்சா செடிகளை மறைத்து வைத்து வளர்த்துள்ளனர். சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள துடன் மேல திக விசாரணைகளை பளைப்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (5-4-100-316)



வட மாகாண கட்டட நிர்மாண சங்கத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான டக்சன் மாந்தை மேற்கு வட்டக்கண்டல் சுடரொளி விளையாட்டுக்கழகத்திற்கு ஒரு தொகுதி உதைபந்தாட்ட பாதணிகளை நேற்று வழங்கினார். (படம்- ஜோசப் நயன்)

# கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் தட்டுப்பாடு

(குருமன்காடு)

அரசாங்கத்தினால் அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றுக்கு கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்ட போதும் வவுனியா சதொசவில் அதனைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அரசாங்கத்தினால் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 100 ரூபாய், சீனி ஒரு கிலோ 85 ரூபாய், பெரிய மீன் ரின் ஒன்று 200 ரூபாய் என கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் குறித்த பொருட்களை கொள்வனவு செய்ய சதொச விற் பனை நிலையத்திற்கு மக்கள் சென்ற போதும், அங்கு குறித்த கட்டுப்பாட்டு விலையில் மீன் ரின் மட்டுமே இருந்தது.

சீனி மற்றும் பெரிய வெங்காயம் என்பன இல்லை என தெரிவிக்கப்பட்டது.

எனவே, கட்டுப்பாட்டு விலை அறிவித்ததும் பொருட் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பில் அரசாங்கம் மற்றும் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி கட்டுப்பாட்டு விலையில் பொருட்களைப் பெறக் கூடிய நிலையை உருவாக்கி தர வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (5-4-250)

# மரக்கடத்தல் முறியடிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தர்மக்கேணிப் பகுதியில் இடம்பெறவிருந்த மரக்கடத்தலில் பளைப் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டது.

பளைப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸாரால் இக் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

குறித்த இடத்தில் நாவல் மற்றும் வேப்ப மரக்குற்றிகள் வெட்டப்பட்டுக் காணப்பட்டன. அத்துடன் உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டிருந்தவர்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடியுள்ளனர்.

அதனையடுத்து பொலிஸார் உழவு இயந்திரத்தினையும் மரக்குற்றிகளையும் மீட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-315)

# இராசிபலன்

19.10.2020
ஐப்பசி 03, திங்கட்கிழமை
திருதியை முன்னிரவு 7.09 மணிவரை
விசாகம் முற்பகல் 11.04 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சந்திராஷ்டமம்:- அச்சுவினி

வளவன்


மேஷம்
கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.


ரிஷபம்
தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வப்படுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


மிதுனம்
வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.


கடகம்
அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்; தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.


சிம்மம்
தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்படையும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கன்னி
எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


துலாம்
சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், பக்கபலமாக இருப்பவர்கள் எண்ணிக்கை கூடும்.


விருச்சிகம்
விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே கைகூடும், பயணத்தால் பலன் கிடைக்கும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், கற்பனை மிகுதியான நாள்.


தனுசு
திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், சுபசெலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.


மகரம்
பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள் வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


கும்பம்
நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன்கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.


மீனம்
விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

சுயநலம் எங்கே இறக்கிறதோ அங்கே சந்நியாசம் இருக்காது.

# மட்டக்களப்பில் விபத்து இருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- செட்டிபாளையத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில், களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


குறித்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தை அதே வழிப் பாதையூடாக பயணித்துக் கொண்டிருந்த கார் முந்திச் செல்ல முயற்சித்தபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இவ்விபத்தில் காரில் பயணம் செய்த இருவர் காயமடைந்ததுடன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# பி.சி.ஆர்.பரிசோதனை இயந்திரங்களை இலங்கைக்கு வழங்கியது அவுஸ்திரேலியா



(கொழும்பு)

அவுஸ்திரேலிய பாதுகாப்புத் துறை மற்றும் அவுஸ்திரேலிய உள்துறை திணைக்களம் இணைந்து 4 பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரங்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இலங்கை கடற்படையினரிடம் இந்த கருவிகள் வழங்கப்பட்டன.

அதன்படி அவுஸ்திரேலிய பாதுகாப்புத் துறையால் இரண்டு பி.சி.ஆர்.பரிசோதனை இயந்திரங்களும் அவுஸ்திரேலிய உள்துறை திணைக்களத்தால் இரண்டு பி.சி.ஆர்.பரிசோதனை இயந்திரங்களும் கடற்படைக்கு வழங்கப்பட்டன. இந்த பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரங்கள் ஒரே நேரத்தில் 4 மாதிரிகள் சோதனை செய்வதற்கான திறன் கொண்டுள்ளது. (ஜ-4)

# அமெரிக்க தயாரிப்பு துப்பாக்கி அம்பாறையில் கண்டுபிடிப்பு

(அம்பாறை)

அமெரிக்காவின் தயாரிப்பான துப்பாக்கி ஒன்றும் அதற்கு பயன்படுத்திய 40 ரவைகளும் நேற்று ஞாயிற்றுக்கிழமை விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சாகாமம் பெரியதிலாவ ஊறக்கை பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடு பட்டிருந்த போது, பிளாஸ்டிக் குழாய் ஒன்றில் மறைத்து வைக் கப்பட்டிருந்த நிலையில் துப்பாக்கி மற்றும் 40 ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.



குறித்த துப்பாக்கி சுத்தம் செய்யப்பட்டு இயங்கு நிலையில் இருந்ததாகவும் கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் ரவைகளை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான பணியினை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## 265 பேர் கைது

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் பிறப்பிக்கப் பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச் சாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 53 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த காலப்பகுதியில் 48 வாகனங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், கம்பஹா மாவட்டத்தில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இது வரை 265 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா- மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பெண்ணொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டதையடுத்து, அவருடன் தொடர்புடைய பலருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து, கம்பஹா மாவட்ட த்தின் 19 பொலிஸ் அதிகார பிரிவுகளுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


# துயர் பகிர்வு

## திருமதி.கமலம்மா பொன்னம்பலம்

எமது பாடசாலையின் ஆரம்பக்கல்வி ஆசிரியை திருமதி. றஜனி ரவீந்திரநாதன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி.கமலம்மா பொன்னம்பலம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.

(4406)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

## 13

### (நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அதில் உள்ள நடபடிகள் பின்வருமாறு.

**ஒவ்வொரு வேட்பாளர்களும் பெற்றுள்ள விருப்புக்களை எண்ணல்**

1. முதலில் ஒரு வாக்கெண்ணும் நிலையத்தை கருதுவோம்.


2. ஒவ்வொரு கட்சியினதும் விருப்பு வாக்குகள் வெவ்வேறாக எண்ணப்படும்

3. ஆகக்கூடுதலான வாக்குத் தொகையைப் பெற்றுக்கொண்ட கட்சியின் வாக்குச் சீட்டுக்களிலுள்ள விருப்பு வாக்குகளே முதலில் எண்ணப்படும். அதைத் தொடர்ந்து இரண்டாவது, மூன்றாவது என்ற அடிப் படையில கூடுதலான வாக்குத் தொகையைப் பெற்றுக்கொண்ட கட்சிகளின் விருப்பு வாக்குகள் எண்ணப்படும்

4. ஆசனாங்களைப் பெற்ற கட்சிகளின் விபரம் தெரிவத்தாட்சி அலுவலர் (அரச அதிபர்) மூலம் பெற்றுக் கொண்ட பின் ஆசனாங்களைப் பெறாத கட்சிகளின் விருப்பு வாக்குகள் எண்ணப்பட வேண்டிய தேவை ஏற்படாது.

5. தேவைக்கேற்றவாறு வாக்கெண்ணும் மேசை முதலில் தயார்படுத்தப்படும். படம்-8 இனைப் பார்க்கவும்.

படம். 8 ஒரு கட்சியின் விருப்பு வாக்குகளை எண்ணுவதற்கு மேசையைத் தயார் செய்தல்




6. உரிய ஒரு கட்சியின் வாக்குச் சீட்டுக்களிலுள்ள விருப்பு வாக்குகள் முதலில் வகைப்படுத்தப்படவேண்டும். அதற்கு வெவ்வேறு அடையாளங்களுடன் கூடிய பெட்டிகள் தயார்ப்படுத்தப்படும். படம் 9 ஐப் பார்க்க.

7. ஒரு கட்சியின் வாக்குகள் முதலில் **P1,P2,P3,NoP,Pvoid,P,4** என 6 வகையில் வகைப்படுத்தி வேறாக்கப்படும்.


8. **NoP,Pvoid,P,4** என வகைப் படுத்தப்பட்டவை வெவ்வேறாக எண்ணி கணக்கிடப்பட்டு பதியப்பட்டு வேறாக வைக்கப்படும்.

9. அதேநேரத்தில், முதலில் ஒரு விருப்பு **(P1)** ஐக் கொண்ட வாக்குச் சீட்டுகள் 50 ஐக் கொண்ட கட்டுகளாக்கப்பட்டு, தொடரிலக்கங்கள் இடப்பட்டு அதில் உள்ள விருப்பு வாக்குகள் ஒப்புநோக்கல் பத்திரமொன்றில் **(CE/CO/PR/1)** விருப்புக்கள் பதியப் படும். ஒரு ஒப்புநோக்கல் பத்திரத்தில் 50 வாக்குச் சீட்டுகள் மட்டுமே பதிய முடியும். எனவே தேவைக் கேற்றவாறு, ஒப்புநோக்கல் பத்திரங்கள் எடுக்கப்பட்டு ஒரு விருப்பு **(P1)** பதியப்படும்.

10. ஒரு விருப்பு **(P1)** பதியப்பட்டு முடிந்ததும் அதே முறையில் இரு விருப்புக்கள், மூன்று விருப்புக்கள் ஒப்புநோக்கல் பத்திரங்களில் பதியப் படும்.

11. ஒரு விருப்பு, இரு விருப்புக்கள், மூன்று விருப்புக்கள் ஒப்புநோக்கல் பத்திரங்களில் பதியப்பட்டு முடிந்தவுடன் அவை முதலாம் பொழிப்புப் பத்திரத்திரங்களில் **(CE/CO/PR/2)** பதியப்படும். ஒரு முதலாம் பொழிப் புப் **(CE/CO/PR/2)** பத்திரத்தில் 20 ஒப்புநோக்கல் பத்திரங்களின் புள்ளி விபரங்கள் மட்டும் பதியமுடியும். அதாவது ஒரு கட்சியின் 1000 வாக்குச் சீட்டுகளின் விருப்புகள் மட்டுமே பதியமுடியும். எனவே தேவைக் கேற்றவாறு, முதலாம் பொழிப்புப் பத்திரத்திரங்கள் எடுக்கப்பட்டு எல்லா ஒப்புநோக்கல் பத்திரங்களில் உள்ள புள்ளி விபரங்கள் பதியப்படும்.

படம்9 விருப்பு வாக்குகள் இடுவதற்கான பெட்டிகளை தயார் செய்தல்




12. அதன்பின் முதலாம் பொழிப் புப் பத்திரங்களில் உள்ள புள்ளி விபரங்கள் இரண்டாம் பொழிப்புப் பத்திரத்தில் **(CE/CO/PR/3)** பதியப் படும்.

இரண்டாம் பொழிப்புப் பத்திரத் தில் **(CE/CO/PR/3),15** முதலாம் பொழிப்புப் பத்திரங்களின் **(CE/CO/PR/2)** புள்ளி விபரங்கள் மட்டுமே பதியமுடியும். அதாவது ஒரு கட்சியின் 15000 வாக்குச் சீட்டுகளின் விருப்புகள் பதியமுடியும்.

பொதுவாக ஒரு வாக்கெண்ணும் நிலையத்தில் ஒரு கட்சிக்கான வாக்குகள் 15000 ஐத் தாண்டாது. எனவே இரண்டாம் பொழிப்புப் பத்திரத்திரம் **(CE/CO/PR/3)** ஒன்று மட்டும் போதுமானதாகவிருக்கும்.

13. அதன்பின் உரிய கட்சியின் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட மொத்த விருப்புக்களின் எண்ணிக்கை "விருப்பு முடிவுகளை முகவர்களுக்கு விநியோகித்தல் **(PE/4)**" படிவத்தில் தயாரிக்கப்படும்.

14. இதே நடபடியில் அவ் வாக்கெண்ணும் நிலையத்தில் மற்றைய கட்சிகளும் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளுக்கான **(CE/CO/PR/1) (CE/CO/PR/2) (CE/CO/PR/3)** மற்றும் **(PE/4)** படிவங்கள் தயாரிக் கப்படும்.

15. அதன்பின்னர் **(CE/CO/PR/2) (CE/CO/PR/3)** மற்றும் **(PE/4)** படிவங்கள் பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையத்தில் அவ்வாக் கெண்ணும் நிலையத்தால் கையளிக்கப்படும்.

16. இவையாவும் முற்றுப்பெற்றதும் ஒரு வாக்கெண்ணும் நிலையத்தில் வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகள் தெரியவரும்.

17. இவ்வாறு ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலுமிருந்தும் **(CE/CO/PR/2) (CE/CO/PR/3)** மற்றும் **(PE/4)** படிவங்கள் பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையத்தில் கையளிக்கப்படும்.

18. 2020 தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் வாக்கெண்ணும் நிலையங்களாக யாழில் 73 நிலையங்களும் கிளிநொச்சியில் 14 நிலையங்களும் மொத்தமாக 87 வாக்கெண்ணும் நிலையங்களும் இதைவிட 16 தபால்மூல வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக் கப்பட்டிருந்தன.

19. எனவே யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்கான 103 வாக்கெண்ணும் நிலையத்திலுமிருந்தும் **(CE/CO/PR/2) (CE/CO/PR/3)** மற்றும் **(PE/4)** படிவங்கள் பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையத்திற்கும் கிடைக்கப்பெறும் போது அவை கணனிமயப்படுத்தப்பட்டு முடிவில் வெற்றிபெற்ற வேட்பாளர்களின் பெயர்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

(தொடரும்)

# விசமிகள் தாக்கியதில் தேவாலயம் சேதம்

(கொழும்பு)

திருகோணமலை - சீனக்குடாவின் நாச்சிக்குடா பகுதியில் 50 ஆண்டு களுக்கும் மேலாக அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று இனவாதிகளினால் கடுமையாக சேதமாக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - நாச்சிக்குடா பகுதியில் அமைந்துள்ள குறித்த கிறிஸ்தவ ஆலயத்தில் இதற்கு முன்னரும் இவ்வாறான இனவாத விஷமிகளினால் ஆல்யம் சேதமாக்கப்பட்ட போதிலும் இதுகுறித்து எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என அருட்தந்தை ஜோர்ச் திசாநாயக்க கவலை தெரிவித்துள்ளார்.

குறித்த ஆலய மலைப்பகுதியில் காணப்பட்ட சிலுவைகள் இடிக்கப்பட்டதோடு, ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அமருகின்ற இடமும் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளது

மூவின மக்களும் வசித்து வருகின்ற குறித்த பகுதியில் இவ்வாறான செயல் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், குறித்த ஆலயப் பகுதியில் சட்டவிரோத கட்டடங்கள் கட்டப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளன. (ஐ-4)

# நியூசிலாந்து பாராளுமன்றத்திற்கு தெரிவான இலங்கைப் பெண்

(கொழும்பு)

இலங்கைப் பெண்ணான வனுஷி வால்டர்ஸ் என்பவர் முதன்முறையாக நியூசிலாந்து பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார்.

நியூசிலாந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் முதலாவது இலங்கையர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார் வனுஷி வோல்டர்ஸ்.

நியூசிலாந்தின், வடமேற்கு ஆக்லாந்தில் இடம்பெற்ற தேர்தலில் வெற்றிபெற்றதன் மூலம் இவருக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாகியும் கிரிக்கெட் வீரருமான தேசிய வேட்பாளர்



ஜேக் பெசன்ட் என்பரை எதிர்த்து போட்டியிட்ட வனுஷி வால்டர்ஸ் வெற்றி பெற்றுள்ளார்.

இதில் பெசாண்டின் 12 ஆயிரத்து 727 வாக்குகளையும், வனுஷி வால்டர்ஸ் 14 ஆயிரத்து 142 வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

வனுஷி வால்டர்ஸ் தனது 5 வயதில் நியூசிலாந்திற்கு குடிபெயர்ந்துள்ளார. இவர் ஒரு மனித உரிமை வழக்கறிஞராகவும் மனித உரிமைகள் ஆணையகத்தின் மூத்த மேலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த நியூசிலாந்து பாராளுமன்றத் தேர்தலில் தொழிலாளர் கட்சி மாபெரும் வெற்றியை பெற்றுள்ளது.

இதன்மூலம் நியூசிலாந்து பிரதமராக இருந்த ஜெசிந்தா ஆர்டன் மீண்டும் வெற்றி பெற்று பிரதமராகி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (ஐ-4)

# கொரோனா பற்றி அறிந்துகொள்ள

# 1999

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தொடர்பில் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் அறிந்து கொள்வதற்காக சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் 1999 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக வைரஸ் தொற்றுக்குள்ளாவதை தவிர்ப்பதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் போன்று வைரஸ் தொற்றுக்குள்ளானால் தமது குடும்ப அங்கத்தவர்கள் அடங்கலாக ஏனையோருக்கும் அது பரவுவதை தடுக்கும் முறை தொடர்பான ஆலோசனைகளை இந்தத் தொலைபேசி இலக்கத்தின் மூலம் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

இதேபோன்று சம்பந்தப்பட்ட நோய் அறிகுறிகளுடன் தமக்கு கொவிட்-19 வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ளது என்று உணர்ந்தால் துரிதமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை தெரிந்து கொள்வதற்கும் தேவையான உதவியை பெற்றுக் கொள்வதற்கும் உடனடியாக இந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட மூன்று மொழிகள் மூலம் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்தியர்கள் தமது ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்த சேவையுடன் இணைந்துள்ளனர்.

1999 எனும் புதிய தொலைபேசி இலக்கத்துடன் எத்தகைய தொலைபேசி வலைப்பின்னல் ஊடாகவும் 24 மணிநேரமும் தொடர்பு கொள்வதற்கு பொது மக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## உயர்தரப் பரீட்சை மண்டபத்தில்

# விடை சொல்லிக் கொடுத்த மேற்பார்வையாளர் கைது

(கொழும்பு)

க.பொ.த உயர்தர பரீட்சை எழுதும் மாணவி ஒருவருக்கு தந்திரமான முறையில் விடை சொல்லிக் கொடுத்த பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


வாதுவ மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொறியியல் தொழில்நுட்ப பரீட்சையில் தோற்றிய மாணவி ஒருவருக்கு பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் தந்திரமான முறையில் விடை சொல்லிக் கொடுத்துள்ளார்.

இதனை அவதானித்த பதில் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு அமைய சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த பெண் பரீட்சார்த்தி தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# குணமடைந்தோர் 3403



(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 403 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றுக்கு உள்ளான மேலும் 08 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதேநேரம் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 475 ஆக பதிவாகியுள்ளது.

அவர்களில் 3 ஆயிரத்து 403 பேர் குணமடைந்துள்ள நிலையில், 2 ஆயிரத்து 72 பேர் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். (ஐ-4)

# சர்வஜன வாக்கெடுப்புக் கோரும் திருத்தங்கள் உள்ளடங்காது

## நீதி அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்போது, சர்வஜன வாக்கெடுப்பைக் கோரும் திருத்தங்கள் உள்ளடக்கப்படமாட்டாது என நீதி அமைச்சு கூறியுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 21 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், 20ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் ஏற்கனவே உயர்நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த திருத்தங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதானால், நாடாளுமன்ற உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் அதனை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த திருத்தங்கள், உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் எனவும் நீதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# பாரதம்

## தற்கொலை செய்தவரின் தலை 1300 கிலோ மீற்றருக்கப்பால் மீட்பு

### பெங்களூரில் சோகம்

(டில்லி)

ஓடும் புகையிரதம் முன்பு பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட வாலிபரின் தலை என்ஜினில் சிக்கி 1,300 கிலோ மீற்றர் தூரம் இழுத்து வரப்பட்டு பெங்களூர் வரை வந்தது.

குடும்பத் தகராறு காரணமாக ரவி எனும் நபர் தற்கொலை செய்ய முடிவு செய்தார். அதன்படி கடந்த 2 ஆம் திகதி பேதுல் பகுதியில் உள்ள புகையிரதத் தண்டவாளத்திற்கு வந்த ரவி, அந்த வழியாக வந்த புகையிரதம் முன்பு பாய்ந்தார்.

ரவியின் உடல் பாகங்கள் தண்டவாளத்தின் அருகே சிதறிக் கிடந்தன. இதுபற்றி அறிந்த பேதுல் பொலிஸார் ரவியின் உடல் பாகங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். ஆனால் ரவியின் தலை மட்டும் கிடைக்கவில்லை. அவரது தலையை பேதுலில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரம் வரை புகையிரதத் தண்டவாளத்தில் பொலிஸார் தேடிப்பார்த்தனர். ஆனால் தலை கிடைக்கவில்லை. இந்த நிலையில் டில்லியில் இருந்து பெங்களூர் சிட்டி புகையிரத நிலையத்திற்கு வந்த ராஜஸ்தானி புகையிரத என்ஜினில் ரவியின் தலை சிக்கி இருந்தது. பின்னர் புகையிரத பொலிஸார் என்ஜினில் சிக்கி இருந்த தலையை மீட்டனர்.(ஜ-4)

## நைஜீரியாவில் தாக்குதல்;


(நைஜர்)

வடகிழக்கு நைஜீரியாவின் முக்கிய நகரத்திற்கு அருகிலுள்ள இராணுவத் தளத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 14 நைஜீரிய வீரர்கள் உயிரிழந்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தாக்குதலை இஸ்லாமிய அரசு குழுவுடன் தொடர்புடைய ஜிஹாதிகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

அதன்படி போகோஹராம் குழுவைச் சேர்ந்த போராளிகள் வெள்ளிக்கிழமை மாலை ஜக்கானாவில் உள்ள தளத்தைத் தாக்கி, இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் ரொக்கெட் மூலம் கையெறி குண்டுகளை வீசியதாக இரு ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்தத் தாக்குதலில் இராணுவ கட்டளை அதிகாரி உட்பட மொத்தம் 14 வீரர்கள் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பல வீரர்கள் காணாமல் போயுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)



## நியூ ஷெப்பர்டு ரொக்கெட் பரிசோதனை வெற்றி



(வோஷிங்டன்)

நிலவில் தரையிறங்கும் தொழில்நுட்பத்துடன் கூடிய நாசா விண்கலத்தை சுமந்து செல்லும் நியூ ஷெப்பர்டு ரொக்கெட் சோதனை வெற்றிகரமாக அமைந்தது.

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையமான நாசா, வரும் 2024 ஆம் ஆண்டு நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பத் திட்டமிட்டு இருக்கிறது. இதற்காக 3 வெவ்வேறு திட்டங்களை வகுத்து வருகிறது. இந்தத் திட்டத்துக்கு 28 பில்லியன் டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நிலவில் தரையிறங்கும் தொழில்நுட்பங்களை மேம்படுத்தி உள்ளது.


நிலவில் தரையிறங்கும் தொழில்நுட்பத்துடன் கூடிய விண்கலத்தை சுமந்து செல்லும் புளூ ஆரிஜின் நிறுவனத்தின் நியூ ஷெப்பர்டு ரொக்கெட் தொடர்ந்து சோதனை செய்யப்பட்டு வருகிறது. அவ்வகையில் அண்மையில் டெக்சாஸ் மாநிலத்தின் வர்ன் ஹார்ன் நகரில் இருந்து நியூ ஷெப்பர்டு ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டது. மீண்டும் பயன்படுத்தக்கூடிய ரொக்கெட் மூலம் நடத்தப்பட்ட இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்தது. (ஜ-4)

## ஆசிரியர் தலை துண்

### ஒன்பது பேர் கைது

(பாரிஸ்)

பிரான்ஸில் வரலாற்று ஆசிரியர் தலை
கொல்லப்பட்ட சம்பவத்தில் தாக்குதல் நட
குடும்ப உறுப்பினர்கள் உட்பட 9 பேர் கைது



பிரான்ஸின் பாரிஸ் புற நகர் பகுதியான கன்ஃபன்ஸ்-செயிண்டி-ஹனோரின் பகுதியில் உள்ள பாடசாலையில் வரலாற்று ஆசிரியராக பணியாற்றி வந்தவர் சாமுவேல் பெடி (வயது-47).

இவர் கடந்த 5 ஆம் திகதி தனது வகுப்பில் நபிகள் நாயகத்தின் கேலிச்சித்திரங்களை மாணவர்களுக்கு காட்டியுள்ளார். கருத்து சுதந்திரம் தொடர்பான வகுப்பு நடந்த விவாதத்தில் நபிகள் நாயகத்தின் கேலிச்சித்திரங்களைக் காட்டியுள்ளார்.

அப்போது அந்த வகுப்பில் படித்து வந்த ஒரு மாணவனின் பெற்

## ஆப்கானில் குண்டுவெடிப்பு 12 பேர் பலி;102 பேர் காயம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் மேற்கு மாகாணமான கோரில் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகத்திற்கு அருகே நேற்று இடம்பெற்ற தற்கொலைக் கார் குண்டுத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இந்த அனர்த்தத்தில் 102 பேர் காயமடைந்துள்ளதாக ஆப்கானிஸ்தானின் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.



இந்தக் குண்டுவெடிப்பு மாகாண தலைநகர் ஃபிரூஸ்கோவில் இடம்பெற்றது.

பொலிஸ் தலைமையகத்துடன், நீதித்துறை அலுவலகங்கள், பெண்கள் விவகாரத் துறை மற்றும் பல அரச நிறுவனங்கள் குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதியைச் சுற்றி அமைந்துள்ளன.

இந்தக் குண்டு வெடிப்புக்கு எந்த அமைப்பும் இன்னும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தேர்தலில் தோற்றால் நாட்டை விட்டு வெளியேறுவேன்

### ட்ரம்ப் கூறுகிறார்

(வோஷிங்டன்)


அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோற்றால் நாட்டை விட்டு வெளியேறுவேன் என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயக கட்சி வேட்பாளராக ஜோபிடன் களம் இறங்கியுள்ளார்.



இருவரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஒருவர் மீது ஒருவர் சரமாரியாக குற்றச்சாட்டுகளை கூறி பிரசாரம் செய்து வருகிறார்கள். தேர்தலுக்கு இன்னும் 2 வாரங்களே இருப்பதால் அமெரிக்காவில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)



# வெளிநாடு


## ...ல்;14 வீரர்கள் உயிரிழப்பு



## ...துண்டித்துக் கொலை

### ...தாகினர்

...தலை துண்டித்துக்
...ல் நடத்திய நபரின்
...கைது செய்யப்பட்டனர்.



...ரோர் நபிகள் நாயகத்தின் கேலிச்சித்...

திரங்களைக் காட்டக்கூடாது என சாமுவேலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், சாமுவேலுக்குப் பல தரப்பில் இருந்தும் எச்சரிக்கையும் வந்துள்ளது.

இதற்கிடையில், பாடசாலை அருகே நேற்று முன்தினம் மாலை நடந்து சென்று கொண்டிருந்த சாமுவேல் பெடியை பின் தொடர்ந்து வந்த 18 வயது இளைஞன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை கொண்டு சாமுவேலின் தலையைத் துண்டித்து கொடூரமாக கொலை செய்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கொலையாளியைச் சரணடையக் கேட்டுக்கொண்டனர். ஆனால், அந்தக் கொலையாளி தப்பிச்செல்ல முற்பட்டதால் கொலையாளியை பொலிஸார் சுட்டுக்கொன்றனர்.

இந்நிலையில், கொடூரக் கொலைச் சம்பவத்தில் தொடர்புடையதாக சந்தேகத்தின் அடிப்படையில் இதுவரை 9 பேரை பிரான்ஸ் பயங்கரவாதத் தடுப்புக் குழு கைது செய்துள்ளது. (ஜ-4)

## வியட்நாமில் நிலச்சரிவு
## 22 இராணுவத்தினர் மாயம்



(ஹனோய்)

வியட்நாமின் மத்திய மாகாணமான குவாங் திரி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி குறைந்தது 22 இராணுவ வீரர்கள் காணாமல் போயுள்ளனர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒக்டோபர் தொடக்கத்தில் இருந்து பெய்துவரும்கடுமையான மழையால் மத்திய வியட்நாமில் வெள்ளம் மற்றும் மண் சரிவுகளில் சிக்கி 70 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இருப்பினும் அடுத்த சில நாட்களில் அதிக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஜ-4)

## இம்ரான்கானை பதவி விலகக்கோரி
## பல்லாயிரக்கணக்கான மக்கள் போராட்டம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் புதிய கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், பல்லாயிரக்கணக்கான மக்களை ஈர்த்தது.

மத்திய பாகிஸ்தான் நகரமான குஜ்ரான்வாலாவில்நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போராட்டத்தினை பாகிஸ்தான் ஜனநாயக இயக்கம் (பி.டி.எம்) நடத்தியது.

இது 11 எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் கூட்டணியாகும். இந்தப் போராட்டம் இம்ரான் கானை அதிகாரத்திலிருந்து வெளியேற்ற ஒன்றுபட்டது.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள குஜ்ரன்வாலா நகரில் நடைபெற்ற இந்தப் பேரணியை நகரவிடாமல் தடுக்க ஆளும்கட்சியினரும் பொலிஸாரும் வீதிகளில் தடுப்புகளை வைத்தபோதும் தடுப்புகளை நீக்கிவிட்டு பேரணி நடத்தப்பட்டது.

பாகிஸ்தான் மக்களின் வாக்குரிமையை மீட்க வேண்டும் என்றும் மேற்கத்தேய நாடுகளின் கட்டுப்பாட்டில் பாகிஸ்தான் இருக்கக்கூடாது என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஓரணியில் இணைந்து இந்த பிரம்மாண்டமான போராட்டத்தில், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக், பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் ஜமைத் உலேமா இ இஸ்லாம் கட்சிகள் பங்கேற்றன.

அத்துடன், பி.எம்.எல்-என் தலைவர் நவாஸ் ஷெரீப், பிபிபி தலைவர் பிலாவால் பூட்டோ சர்தாரி மற்றும் ஜே.யு.ஐ-எஃப் தலைவர் ஃபஸ்ல்-உர்-ரெஹ்மான் உள்ளிட்ட ஒவ்வொரு முக்கிய எதிர்க்கட்சிகளின் முக்கிய தலைவர்களும் இந்த கூட்டத்தில் உரையாற்றினர்.

மூன்று முறை முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், லண்டனில் இருந்து காணொலி இணைப்பு மூலம் நேரடியாகப் பேசினார்.

மருத்துவ சிகிச்சைக்காக இங்கிலாந்து செல்ல பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் தனது முதல் பொது உரையில், இராணுவம் தனது அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டதாகவும் 2018 ஆம் ஆண்டு தேர்தலின் போது இம்ரான்கானை நிறுவியதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (ஜ-4)

## ஆர்மீனியா-அசர்பைஜான் இடையே
## போர் நிறுத்த ஒப்பந்தம் அமுல்

(ஜேர்மான்)

ஆர்மீனியா - அசர்பைஜான் நாடுகள் இடையிலான புதிய போர் நிறுத்த ஒப்பந்தம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

சர்ச்சைக்குரிய நாகோர்னோ காராபாக் பிராந்தியம் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பான பிரச்சினையில் அசர்பைஜான் மற்றும் ஆர்மீனியா நாடுகளுக்கு இடையில் கடந்த மாத இறுதியில் பயங்கர மோதல் வெடித்தது.

இருதரப்பு இராணுவமும் கடுமையாக மோதிக் கொண்டதில் நூற்றுக்கணக்கான வீரர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இதில் அப்பாவி மக்கள் பலரும் உயிரிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து, ரஷ்யாவின் சமாதான முயற்சியின் மூலம் இரு நாடுகளும் போர் நிறுத்தத்துக்குச் சம்மதம் தெரிவித்து, கடந்த வாரம் அங்கு போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது. ஆனால் போர் நிறுத்தத்தை மீறி இரு நாடுகளும் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தப் போர் நிறுத்த மீறலுக்கு ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டுகின்றனர். நேற்றும் குடியிருப்புப் பகுதி மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அசர்பைஜான் மற்றும் ஆர்மீனியா மோதல் தொடர்பாக இன்று திங்கட்கிழமை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கூடி விவாதிக்கப்படவுள்ளது.

இதற்கிடையே போர் நிறுத்தம் தொடர்பான புதிய உடன்படிக்கைக்கு இரு நாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன. (ஜ-4)

## நியூசிலாந்தில் பொதுத்தேர்தல்
## 2 ஆவது முறையும் பிரதமராகும் ஜெசிந்தா



(வெலிங்டன்)

நியூசிலாந்து பொதுத் தேர்தலில், தற்போதைய பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் இரண்டாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார். 77 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், ஆர்டெர்னின் இடது சாரி தொழிற்கட்சி 49 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது.

தொழிற்கட்சியின் பிரதான எதிர்க்கட்சியான மத்திய-வலது தேசியக் கட்சி 27 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது.

இதன்போது, தேசியத் தலைவர் ஜூடித் காலின்ஸ், தோல்வியை ஒப்புக் கொண்டதோடு, ஆர்டெர்னை வாழ்த்தினார்.

முடிவுகள் இன்னும் கணக்கிடப்படுகின்றன. சிறப்பு வாக்குகள், வெளிநாடுகளில் வசிக்கும் நியூசிலாந்தர்கள் அளித்த வாக்குகள் உட்பட அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்டு மூன்று வாரங்களில் இறுதி முடிவுகள் வெளியிடப்படும்.

தொழிற்கட்சி கடந்த தேர்தலில் 37 சதவீதம் பெற்றிருந்தது. அதே நேரத்தில் அதன் தற்போதைய கூட்டணி பங்காளியான பசுமைக் கட்சி 7.6 சதவீதத்தினை பெற்றுள்ளது. கடந்த தேர்தலில் 6.3 சதவீதத்தைப் பெற்றது.

தொழிற்கட்சி தனியாக ஆட்சி செய்ய முடியுமா? அல்லது பசுமைவாதிகளுடன் ஒரு கூட்டணியை உருவாக்க வேண்டுமா? என்பது குறித்த இறுதி முடிவுகள் வரும் வரை இது தெளிவாக இருக்காது. (ஜ-4)



# ஏழைகளின் அப்பிளான நெல்லிக்கனி

ஏழைகளின் அப்பிள் என்றும் ராஜகனி என்றும் போற்றப்படும் நெல்லிக்கனியானது அரிநெல்லி என்றும் பெருநெல்லி அல்லது காட்டு நெல்லி என இரு வர்க்கங்களாக எமக்கு கிடைக்கின்றன. இதில் பெருநெல்லி வர்க்கம் அதிக மருத்துவ குணம் கொண்டதாகவுள்ளது.

நெல்லி இயுபோர்பியேசியே **(Euphobiaceae)** குடும்பத்தைச் சேர்ந்த ஓர் பழப்பயிராகும். இது சிறிய அல்லது நடுத்தர உயரமான இலையுதிர்க்கும் மர வகையைச் சேர்ந்தது. நெல்லி இலைகள் புளியமிலையை விட சிறியவை, இறகு வடிவமானவை. நெல்லியின் கிளைகளும் இறகு போன்ற தோற்றமுள்ளவை. ஆண், பெண் பூக்கள் தனித்தனியானவை. நெல்லிக்காயகள் கொத்தானவை, இளம் மஞ்சள் நிறமானவை, சதைப்பற்றானவை, உருண்டையானவை.

Kingdom:Plantae
Family: Phyllanthaceae
Order: Malpighiales
Family: Phyllanthaceae
Genus: Phyllanthus
Botanical Name: *Emblica officinalis/ Phyllanthus emblica*

### நெல்லியின் முக்கியத்துவங்கள்

1.பழப்பயிர்களில் அதிகளவு விற்றமின் சி கொண்ட பழப்பயிராக நெல்லி காணப்படுகின்றது. ஏனைய பழங்களில் உள்ள விற்றமின் சி போசணை வெப்பத்தினால் எளிதில் அழியக்கூடியது. ஆனால் நெல்லியில் எந்தச் சூழ்நிலையிலும் சிதையாமல் நீண்ட நாட்கள் பாதுகாக்கப்படுகின்றது.

2.100 கிராம் நிறையுள்ள பழங்களில் காணப்படும் விற்றமின் சி இன் அளவு (மில்லி கிராமில்)

- அன்னாசி- 0.12
- தக்காளி- 32
- எலுமிச்சை- 63
- வாழைப்பழம்- 170
- கொய்யா- 200
- நெல்லி- 700

3.இதன் இலை, பட்டை, வேர், பூ என அனைத்து பகுதிகளுமே மருந்தாக பயன்படுகின்றது.

4.இலைக்கொழுந்து சீதக்கழிச்சலினைத் தடுப்பதற்கு பயன்படுகின்றது.

5.பூ குளிர்ச்சியுண்டாக்கியாகவும் மலமிளக்கியாகவும் செயற்படுகின்றது.

6.நெல்லி மரவேர் வாந்தி, சுவையின்மை ஆகியவற்றை குணப்படுத்தும்.

7.நெல்லிக்கனி கண்களுக்கு குளிர்ச்சி தரும். உணவுச்சமிபாட்டினைத்தூண்டும், சிறுநீர் பெருக்கும், குடல் வாயுவை அகற்றும், எலும்புருக்கி நோய், வாந்தி போன்றவற்றை குணமாக்கும்.

8.நெல்லிக்காய் வற்றல் இருமல், சளி போன்றவற்றை குறைக்கும், உடலைப் பலப்படுத்தும்.

9.நெல்லிக்காய் தைலம் பயன்படுத்தினால் கண்கள் பிரகாசமாக இருக்கும், சொடுகு கட்டுப்படுவதுடன் தலைமுடி உதிர்தலும் தடுக்கப்படும்.

10.நெல்லி மரப்பிசின் பல மருந்துகளில் கூட்டுப்பொருளாக சேர்க்கப்படுகின்றது.

11.நாள் முழுவதும் தங்களது வாழ்க்கையை நெல்லியோடு இணைந்து வாழ்ந்தவர்கள் நீண்ட ஆயுளோடும் கண்கள் அதிக பிரகாசத்துடனும் தேக ஆரோக்கியத்துடனும் வாழ்ந்துள்ளார்கள்.

12.இம்மரத்தின் நிழலில் நின்று இளைப்பாறி மரத்தின் காற்றை சுவாசித்தாலே நோய்கள் பறந்து போகும் என்று சொல்லப்படுகின்றது. இம் மரத்தின் நிழல் உடலுக்கு ஒரு வித குளிர்ச்சியை கொடுக்கும்.

அக்காலத்தில் வாழ்ந்த முனிவர்கள் அவர்கள் குளிக்க பயன்படுத்தும் நீர்நிலைகளில் நெல்லி மரக்கட்டைகளை போட்டு வைத்து இதில் குளிப்பதாகவும் சாப்பிடும் உணவு வகைகளில் அதிகமாக நெல்லிக்கனியினையும் சேர்த்துக் கொள்வதாகவும் இரவு தூங்கும் போது நெல்லி இலைகள் கொண்டு தயாரித்த படுக்கையில் துயில் கொள்வதாகவும் புராணங்களில் சொல்லப்படுவதுண்டு.

13.தற்போது நெல்லிப்பழச்சாறு உற்பத்தியும் விற்பனையும் மிகப்பிரபல்யமான ஒரு வர்த்தக நடவடிக்கையாக இடம்பெறுகின்றது.

### பயிராக்கவியல் நடவடிக்கைகள்

**காலநிலை**

மழை வீழ்ச்சி- வருடாந்த மழை வீழ்ச்சி 630-800 மில்லி மீற்றர் இப்பயிர்ச்செய்கைக்கு போதுமானது.

வெப்பநிலை- நெல்லி ஒரு வெப்ப மண்டல தாவரமாகும். மூன்று வயது வரையான இளம் தாவரங்களை கடும் வெப்பத்திலிருந்து பாதுகாக்க நிழல் வழங்க வேண்டும். முதிர்ந்த தாவரங்கள் **46°C** வரையிலான உயர் வெப்பநிலையிலும் தாங்கி வளரும்.

**வர்க்கங்கள்**

பனாரசி, சக்கயா, **NA-4** (கிருஷ்ணா), **NA-5** (கஞ்சன்), **NA-6, NA-7, NA-10, BSR-1** (பவானிசாகர்) போன்ற வர்க்கங்கள் உலர் பிரதேசங்களுக்கு பொருத்தமானவை



பனாரசி

### நடுகைப்பொருள்

விதை, ஒட்டு மற்றும் இழைய வளர்ப்பு முறையில் உருவாக்கப்படும் கன்றுகள் நடுகைப்பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் பெரிய காய்களை தரக்



கிருஸ்ணா

கூடிய இனங்களை ஒரு வருட வயதுடைய ஒட்டுக்கட்டைகளில் (பன்றுகளில்) ஒட்டுவதன் மூலம் கூடிய விளைவைத்தரக்கூடிய ஒட்டுக்கன்றுகளை நடுகைக்கு பயன்படுத்தலாம்


### நடுகை தொழில்நுட்பம்

1.நடுகைக்காலம் - புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் நடுகை செய்வது சிறந்தது.

2.நடுகை இடைவெளி - **15' x 15'**

3.நடுகைக்குழி - பருவகால மழைக்கு முன் நடுகைக்குழி தயாரித்தல்

-நடுகை மேற்கொள்ள ஒரு மாதத்திற்கு முன் நிலத்தை சுத்தப்படுத்தி உழ வேண்டும். **3' x 3' x 3'** நீள அகல ஆழத்தில் குழிகளை அமைத்து மேல்மண்ணுடன் 25 கிலோ கிராம் கூட்டெரு மற்றும் 500 கிராம்



NA7

ரீ.எஸ்.பீ கலந்து குழியை நிரப்பல்.


4.நடுகை - குழியை நிரப்பி இரண்டு கிழமைகளின் பின்னர் நெல்லிக்கன்றின் கொள்கலனினை அகற்றி நடுகை செய்தல்.

### பசளையிடல்

- ஒரு மரத்திற்கான வருடாந்த பசளையளவு (கிராமில்)

-யூரியா 450
-ரீ.எஸ்.பீ 600
-எம்.ஓ.பி 240

- மேற்குறித்த அசேதன பசளைகளை 10 கிலோகிராம் நன்கு உக்கிய மாட்டெருவுடன் கலந்து புரட்டாதி, ஐப்பசி மாதங்களிலிடல் சிறப்பானது.



சக்கயா

### கத்தரித்தல்

- நடுகை செய்யப்பட்ட நெல்லிக் கன்றுகளை நிலமட்டத்திலிருந்து இரண்டரை அடி உயரம் வரை பக்க கிளைகளை வளரவிடாமல் நேராக வளர்த்தல்.



கஞ்சன்

- நிலமட்டத்திலிருந்து இரண்டரை அடி உயரத்தின் மேல் 4-5 கிளைகளை எல்லாத்திசைகளிலும் சுற்றிலுமாக வளரவிட்டு பராமரித்தல்

### நீர்ப்பாசனம்

- கோடை காலங்களில் 15 நாள் இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும்.
- நீரிழப்பைத் தடுப்பதற்கு காய்ந்த இலைகுழைகள், வைக்கோல் மற்றும் உக்கக்கூடிய பொருட்களை பயன்படுத்தி பாத்திகளுக்கு மூடுபடையிடல்.
- பத்திரக்கலவையானது தாவரத்தின் அடியிலிருந்து 15-20 செ.மீ தூரத்தில் இடப்படல் வேண்டும்.
- சொட்டு நீர்ப்பாசனத்தின் கீழ் இப்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம்.

### அறுவடையும் வருமானமும்

- நடுகை செய்து 4-5 வருடங்களில் அறுவடை மேற்கொள்ளலாம்.
- ஒரு கிலோகிராம் 15-20 எண்ணிக்கையான பழங்களை கொண்டது.
- ஒரு மரத்திலிருந்து ஒரு வருடத்திற்கு ரூபா 10,000 வருமானம் பெற முடியும்.
- இவ்வருமானத்தை அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வர்க்கங்களை பயிரிட்டு பராமரிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

### ஊடு பயிர்ச்செய்கை

- பயிர் ஸ்தாபித்து 8 வருடங்கள் வரை உழுந்து, பயறு, கௌபி போன்ற குறைந்த நீர்த்தேவையுடைய மறுவயற் பயிர்களை பயிரிட முடியும். இதனால் ஒரு அலகு நிலத்தின் உற்பத்தி அதிகரிப்பதோடு வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.
- ஒரு ஏக்கரிற்கு 3-4 தேனீப் பெட்டிகளை வைப்பது சாலச்சிறந்தது. இதன்மூலம் நெல்லியின் மகரந்தச்சேர்க்கை அதிகளவில் நடைபெற்று உற்பத்தி அதிகரிப்பதுடன் தேன் மூலமாக மேலதிக வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும்.

**"நன்றாக பராமரிக்கப்பட்ட நெல்லி மரங்களிலிருந்து 70 ஆண்டுகள் வரை உற்பத்தியை பெற்றுக்கொள்ளலாம்"**

தொகுப்பு:-
மு.விளம்பிதன்
விவசாயப் போதனாசிரியர்
மாகாண விவசாயத் திணைக்களம் (வ.மா)

# பெரும்பாலானோருக்கு கொரோனா குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

**குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தின் அதிகாரிகள் மற்றும் 160 க்கும் மேற்பட்ட புலம்பெயர் பெண் தொழிலாளர்களில் பெரும்பாலானோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.**

இதனையடுத்து, இடப்பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு இனி வரும் நாட்களில் எந்தவொரு புலம்பெயர் பெண் தொழிலாளரும் தூதரக காப்பகத்துக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், "குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கைக்கு அனுப்ப முடியாமல் தூதரகத்தின் பராமரிப்பில் உள்ள காப்பகத்தில் நீண்ட காலமாக தங்க வைக்கப்பட்டுள்ள 160க்கும் மேற்பட்ட புலம்பெயர் பெண் தொழிலாளர்களில் பெரும்பாலானோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தின் வேலைவாய்ப்புகள் மற்றும் நலன்புரி பிரிவின் பெரும்பாலான அதிகாரிகளின் சேவைக் காலம் முடிவுக்கு வந்துள்ளது.

எனவே மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களால் பணிபுரியும் இடங்களில் ஏற்படும் முரண்பாடுகளைத் தொடர்ந்து தனது அனுசரணையாளருக்கு தெரியாது வீடுகளை விட்டு வெளியேறி தூதரகத்துக்கு வருவதனைத் தவிர்க்குமாறு அந்நாட்டிலுள்ள இலங்கை பணிப்பெண்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே 25354633 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தூதரகத்தை தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை அறியத்தரலாம்.

அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஊடாக முறைப்பாட்டை மேற்கொண்டு உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

மேற்குறிப்பிடப்பட்ட முறைகளைப் பின்பற்றாது பணி புரியும் இடங்களிலிருந்து வெளியேறுபவர்கள் தமது இருப்பிடத்தை இழப்பதோடு, மீண்டும் தமது அனுசரணையாளரிடமோ அல்லது வேலைவாய்ப்பு முகவரிடமோ (ஏஜன்சி) திரும்பிச் செல்ல நேரிடும், அல்லது தனக்கான தங்குமிடத்தைத் தானே தேடிக் கொள்ள நேரிடும் என்பதனை அறியத்தருகிறோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி ஏரியில் விழுந்து துடித்த யானை

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான யானை ஒன்றுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை-கன்னொருவ வீதிக்கு அருகில் உள்ள கெலனிகம ஏரியில் இந்த யானை மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதனால் படுகாயமடைந்து ஏரியில் விழுந்துகிடந்த யானைக்கு உடவளவ சரணாலயத்தைச் சேர்ந்த வனவிலங்குகள் பாதுகாப்பு அதிகாரிகள் குழு சிகிச்சை அளித்துள்ளனர்.

எவ்வாறாயினும் குறித்த யானை உயிருடன் மீட்கப்பட்டதாகவும் இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

# கடலுணவுகள் நியாயமான விலையில்; அரசு 200 மில்லியன் நிதிஒதுக்கீடு

(கொழும்பு)

மக்களுக்குத் தரமான கடலுணவுகளை நியாயமான விலையில் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கத்தினால் சுமார் 200 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் இடம்பெற்ற வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தின் போது இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு நிதி வழங்கப்படுமாயின் கடற்றொழிலாளர்களுக்கு அதிக கடலுணவு அறுவடை கிடைக்கும் காலப் பகுதியில் அவற்றை நியாயமான விலையில் கொள்வனவு செய்ய முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி அவற்றைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதன் ஊடாக அறுவடை குறைந்த காலப்பகுதியில் அவற்றை மக்களுக்கு நியாயமான விலையில் பெற்றுக் கொடுக்க முடியும் என ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே 200 மில்லியன் ரூபா நிதியைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனுமதி வழங்கியுள்ளார். (ஐ-4)

# தீப்பிடித்து எரிந்த பேருந்து

(கொழும்பு)

கொழும்பு, ஆமர் வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தனியார் பேருந்தொன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

தீப்பரவலுக்கான காரணங்கள் இதுவரை உறுதி செய்யப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## செயற்கை பூச்சிகள்

ஒரு சின்ன எறும்பு. அது பாட்டுக்குப் பேசாமல் ஒரு இடத்திலே உட்காா்ந்திருக்கின்றது. அது இருக்கிற இடத்தைத் தாண்டி யாராவது போனால் திடீர் என்று ஓடிவந்து தாக்குகின்றது... விரட்டுகின்றது... இது எப்படி சாத்தியம்?

விடயம் என்னஎன்றால் அது நிஜமான எறும்பு இல்லை... செயற்கை எறும்பு. அது ஒரு ரோபோட் அமெரிக்காவிலே உள்ள மாசாசூஸெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி...

அங்கே உள்ள ஆய்வு கூடத்திலே தான் இதுமாதிரி செயற்கைப் பூச்சிகளை உருவாக்குகின்றார்கள். இவர்கள் உருவாக்கியிருக்கின்ற செயற்கை எறும்புக்கு ஜென்கிஞ் என்று பெயர்.

இந்த ரோபோட் எறும்பு... கொஞ்சம் கூட செயற்கைத் தனம் இல்லாமல் இயற்கையாக சாதாரணமாக போகின்றது.. வருகின்றது. நடக்கின்றது.. திரும்புகின்றது முன்னாள் போறவரைத் தாக்குகின்றது. ஒரு பெரிய கம்யூட்டருக்குப் பதிலாக... ஒரு சின்ன மைக்ரோ புரோசசர் இந்தப் பணிகளைச் செய்வதனால் இதைப் பார்ப்பதற்கு ஒரு உயிருள்ள எறும்பு மாதிரியே இருக்கின்றது. அது மாதிரியே வேலை செய் கின்றது.

இது மாதிரி எறும்பு மட்டும் இல்லை.. எத்தனையோ விதமான பூச்சிகளை அங்கே உள்ள விஞ்ஞானிகள்ள உரு வாக்குகின்றவர்கள் ... எதற்காக?

வீட்டு வேலைகள் செய்வதற்காக..அறுவைச் சிகிச்சைகள் செய்வதற்காக.. செவ்வாய் கிரகத்துக்குப் போய் ஆராய்ச்சி செய்வதற்காக..

இங்கே உள்ள விஞ்ஞானிகளின் முக்கியமான நோக்கம் என்ன தெரியுமா?ஒரு செயற்கையான உயிரை...இரும்பு உடம்புகளுக்குக் கொடுப்பது. அவைகளை இந்த உலகத்திலே உலவ விடுவது. அது மூலமாக ஆக்கபூர்வமான பணிகளைச் செய்வது. அது தான் குறிக்கோள்.

முதலிலே அவர்கள் உருவாக்கியதற்கு பேர் ஆலன். அது ஒரு துடைப்பம்.

இது சாவி கொடுத்த பொம்மை மாதிரி.. சுவற்றிலே உள்ள ஒட்டடைகளை சுத்தம் செய்யும்... கதவிடம் போகும்... அதிலே உள்ள தூசுகளைத் துடைக்கும்..அவ்வளவு தான்.

அந்த ஆய்வு கூடத்திலே தயாரான இரண்டாவது ரோபோட்-ஹெர்பெர்ட். இதற்கு வேலை என்ன தெரியுமா? அந்த ஆய்வுக் கூடத்திலே அங்கங்கே இருக்கின்ற வெற்றுச் சோடா போத்தல்களை சேகரித்துக் கொண்டு வருவது.

இது மாதிரி இயந்திரப் பூச்சிகளை அனுப்பி சந்திரனிலும் செவ்வாய் கிரகத்திலேயும் ஆய்வுகள் நடத்தலாம் என்று யோசிக்கின்றார்கள்.

அதற்காகவே இவர்கள் என்ன செய்கின்றார்கள்.. இந்த இயந்திரப் பூச்சிகளின் ஒவ்வொரு பகுதியையும் மிகவும் நுணுக்கமாக தயாரிக்கிறார்கள்.

நுண்ணிய உணர்திறன் கொண்டதாக செய்கின்றார்கள்... நுணுக்கமாக செய்திகளைச் சேகரிக்கின்ற வகையிலே வடிவமைத்திருக்கின்றார்கள். ஜென்கிஸ் என்கின்ற எறும்பு இந்த வகையிலே தான் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

அட்டிலா என்கின்ற சக்தி வாய்ந்த ரோபோட்டையும் விண்வெளி ஆய்வுக்காக வடிவமைத்திருக்கின்றார் கள். ஒவ்வொரு கம்பியூட்டர் சில்லும் எழுந்து நடக்க வேண்டும். அது தான் எங்களுடைய கனவு. அந்த கனவு விரைவில் நினைவாகும். என்கின்றார் அங்கே உள்ள ஒரு விஞ்ஞானி.


எங்கள் எறும்புகளைப் பற்றி ஒரு கதை உண்டு. அதாவது ஒரு பெரிய யானை மிரண்டு போய் ஓடிவந்துவிட்டு இருந்ததாம்.

வழியிலே ஒரு சின்ன எறும்பு நின்று கொண்டிருந்தது. அது அந்த யானையைப் பார்த்து ஏன் இப்படி பயந்து ஓடிவந்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டது.

அதற்கு அந்த யானை சொல்லியது. ஒரு பூனை என்னை துரத்திக் கொண்டு வருகின்றது. அது தான் பயந்து ஓடி வந்து கொண்டிருக்கின்றேன் என்றது...அதற்கு இந்த எறும்பு சொல்லியதாம். அதற்காகவா பயப்படாதே.. இனிமேல் பயப்படாதே பேசாமல் என் பின்னால் வந்து ஒளிந்து கொள் என்றதாம்.

# கடல் புறா

## வலைக்குள் வந்த சிங்கம்




"ஒற்றர்கள் கண்பார்வையிலிருக்கும் தெருவில் புறா மூலம் தூது விடுவது அத்தனை சரியல்ல என்று நினைக்கிறேன்" என்றான் பீமன்.

இதைக் கேட்டதும் சில விநாடிகள் ஸ்தம்பித்து நின்று விட்டான் இளைய பல்லவன். அவன் திகைப்பைக் கண்ட கலிங்கத்துப் பீமனது முகத்தில் இகழ்ச்சிப் புன்முறுவல் பெரிதாகப் படர்ந்தது. நீங்கள் மறைந்த வீதியைப் பற்றிச் செய்தி கிடைத்ததும் அதே வீதியைக் கண்காணிக்க ஒற்றர்களை ஏவினேன். தூதுப் புறா அந்த வீதியில் ஒரு மாளிகையை நோக்கிப் பறந்ததாகச் செய்தி கிடைத்ததும் மற்றதை ஊகித்துக் கொண்டேன். இதற்குப் பிரமாத ஆராய்ச்சி தேவையில்லை இளைய பல்லவரே" என்றும் விளக்கினான்.

இளைய பல்லவனின் சித்தம் குழப்பத்தில் ஆழ்ந்து கிடந்தது. குழப்பம் நிரம்பிய வதனத்துடனேயே பீமனை ஏறெடுத்து நோக்கிய இளைய பல்லவன், "புரிந்தது மன்னவா! தங்கள் ஒற்றர் கண்காணிப்புத் திறன் புரிந்தது. இனி என்னை என்ன செய்வதாக உத்தேசம்?" என்று வினவினான்.

"மூன்றாவது ஜாமம் நெருங்குகிறது" என்று பதில் சொன்னான் பீமன். "ஆம்" என்றான் இளைய பல்லவன்.

"காலை வரை எந்தத் தண்டனையும் தங்களுக்கு விதிப்பதற்கில்லை"

"ஏன்?"

"நீதி மண்டபத்தில் விசாரிக்காமல் தண்டனையிடும் வழக்கம் கலிங்கத்தில் கிடையாது".

"நீதிக்கு மதிப்புக் கொடுக்கிறீர்களா?"

"பெருமதிப்புக் கொடுக்கிறோம். பரம விரோதிகளையும் தீர விசாரித்தே தண்டனை கொடுக்கிறோம். ஆகவே தாங்கள் இன்றிரவு நிம்மதியாக உறங்கலாம்" என்று கூறிய பீமன் சரேலெனத் தன் வீரர்களை நோக்கித் திரும்பி "கலிங்கத்தின் வலைக்குள் தானாக வந்த இந்தப் பல்லவச் சிங்கத்தையும் வேவு பார்க்கும் அந்தக் கூலவாணிகனையும் சிறையில் அடையுங்கள்!" என்று ஆணையிட்டு வருகிறேன் இளைய பல்லவரே! நாளை நீதி மண்டபத்தில் சந்திப்போம்" என்று அந்த வாலிப வீரனிடம் விடையும் பெற்றுக்கொண்டு வாயிலை நோக்கி நடந்தான்.

மன்னன் ஆணைப்படி கலிங்கத்தின் வீரர்கள் கூலவாணிகனையும் இளையபல்லவனையும் புரவிகளில் ஏற்றிச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்கிறார்கள். பாலூர்ப் பெருந்துறையின் சிறைச்சாலை பெரு வணிகர் வீதிக்கு இரண்டு வீதிகள் தள்ளியே இருந்தபடியால் வெகு சீக்கிரம் அவர்கள் சிறைக்கு வந்தார்கள்.

பெரு மதில்களால் சூழப்பட்டு பல வாயில்களையுடைய அந்தச் சிறைக் கூடத்தை ஏறிட்டுப் பார்த்த கருணாகர பல்லவன் அதிலிருந்து தப்புவது யாருக்கும் நடவாத காரியமென்பதைப் புரிந்து கொண்டான். தவிர அவனும் கூலவாணிகனும் சேர்த்தே தள்ளப்பட்ட சிறையின் பெரிய அறையைச் சுற்றிலுமிருந்த வலுவான இரும்புச் சட்டங்கள் சிறையிலிருந்து எமனும் தப்ப முடியாதென்பதை நிரூபித்தனவாகையால் 'விடயம் நாளையுடன் முடிந்துவிடும்' என்ற முடிவுக்கே வந்தான் இளைய பல்லவன்.

ஆனால் விடயம் அத்தனை எளிதில் முடிவதாயில்லை. முடிவதற்குச் சரித்திரமும் இடம் கொடுக்கவில்லை. மறுநாள் காலை அவன் அருந்துவதற்குக் கொண்டு வரப்பட்ட அதிசய உணவும் இடம் கொடுக்கவில்லை. உணவைக் கண்டு கூலவாணிகன் அதை வெறுப்புடன் நோக்கினான். ஆனால் இளைய பல்லவன் விழிகளில் வெறுப்பு இல்லை. விருப்பே படர்ந்து நின்றது.

சில ஜாமங்களில் உயிர் துறக்கப் போகும் இளைய பல்லவன் உணவைக் கண்டதும் விருப்பம் காட்டியது பெரும் வெறுப்பாயிருந்தது கூலவாணிகனுக்கு. 'இறக்கப் போகிறவனுக்கு இவ்வளவு விருப்பமா உணவில் சே! இவன் ஒரு மனிதனா' என்று அலுத்துக் கொண்டான். ஆனால் இளைய பல்லவன் விருப்பத்துக்குக் காரணமாயிருந்தது உணவு மட்டுமல்ல என்பதைக் கூலவாணிகன் புரிந்து கொள்ளவில்லை.

## விமோசனச் சீலை

சிறிது நேரத்துக்கெல்லாம் சிறைக் காவலர் தொடரப் பாலூர் நீதி மண்டபம் சென்று சம்பிரதாய விசாரணைக்கு இலக்காகி ஊரின் ஒரு மூலையிலிருந்த கொலைக்களத்தில் தலையிழக்கவிருந்த கருணாகர பல்லவன் அதைப்பற்றித் தினையளவும் சிந்திக்காமல் அன்று காலை கொண்டுவரப்பட்ட உணவுத் தட்டின் மேலிருந்த துணியை அகற்றி, மிக ஜாக்கிரதையாக மடித்து வைத்து உணவைச் சுவைத்துச் சுவைத்து உண்ணத் தொடங்கியதைக் கண்ட கூலவாணிகன் அவனை மிதமிஞ்சிய வெறுப்புடனேயே நோக்கினான்.

அந்த வெறுப்பு அப்பொழுது தொடங்கியதல்ல. முதல் நாள் மூன்றாம் ஜாமத்தில் சிறையில் தள்ளப்பட்டதும். சிறையிலிருந்த மஞ்சத்தைத் தட்டி விட்டுக் கருணாகர பல்லவன் படுக்க ஏற்பாடு செய்தவுடனே ஏற்பட்ட வெறுப்பு அது. சிறையில் இருவரையும் காவலர் தள்ளியதும் காவலரின் ஒருவன் கூலவாணிகனின் கைக் கட்டுகளை அவிழ்த்துவிட்டதன்றி, அந்தச் சிறை, பிரமுகர்கள் தங்கும் சிறையென்பதையும் ஏதாவது தேவையாயிருந்தால் சொல்லலாமென்று பணிவுடன் கேட்டான்.

கூலவாணிகன் அதற்கேதும் பதில் சொல்லாவிட்டாலும் கருணாகர பல்லவன் மட்டும், அப்பொழுது தேவையேதுமில்லையென்றும் ஏதாவது வேண்டும் பட்சத்தில் குரல் கொடுப்பதாகவும் கூறியதைக் கேட்டதுமே கசப்படைந்தான் கூலவாணிகன். ஆகவே சிறைக் காவலர் சிறையைப் பூட்டிச் சென்றதும் கருணாகர பல்லவனை நோக்கி வினவினான். "ஏன்? தங்களுக்கு இந்த இடத்தில் சௌகரியம் ஏதாவது தேவையிருக்கிறதா?"

கருணாகர பல்லவன் ஒருமுறை சிறையைச் சுற்றிக் கவனித்தான் ராஜபிரமுகர்கள் தங்குவதற்கு வேண்டிய சகல சௌகரியங்களும் அங்கிருப்பதையும் மஞ்சங்களில் கூடப் பஞ்சணைகள் இருப்பதையும் பார்த்து. "எனக்குத் தேவையேதுமில்லை. உனக்கு?" என்று வினவினான்.

சிறையிலும் சௌகரியம் தேடும் இளையபல்லவனை வெறுப்புடன் நோக்கிய கூலவாணிகன், தனக்கு ஏதும் தேவையில்லையென்பதைத் தலையை ஆட்டிய தோரணையாலேயே தெரிவித்துவிட்டு, கிழிந்த தன் ஆடைகளைச் சிறிது சரிசெய்து கொண்டதன்றி, கயிறுகள் கட்டியிருந்ததால் நைந்து போயிருந்த மணிக்கட்டுகளையும் கவனித்துக் கொண்டான்.

அவற்றைக் கவனித்த கருணாகர பல்லவனும் கூலவாணிகனை நோக்கி, "சேந்தா! கலிங்க வீரர்கள் உன்னை மிகவும் துன்புறுத்தியிருக்கிறார்கள் போலிருக்கிறதே?" என்று அனுதாபத்துடன் வினவினான்.

"சோழநாட்டு ஒற்றனிடமிருந்து உண்மையை வரவழைக்க வேறு என்ன செய்வார்களென்று நினைக்கிறீர்கள்?" என்று வினவினான் கூலவாணிகன், பதிலுக்கு.

"உன்மீது இவர்களுக்கு எத்தனை நாட்களாகச் சந்தேகம்?" என்று மீண்டும் வினவினான் கருணாகர பல்லவன்.

(தொடரும்...)

# வடக்கு- கிழக்கு அபிவிருத்தி செய்யப்படும்

## வியாழேந்திரன் திட்டவட்டம்

**(மட்டக்களப்பு)**

**வடக்கு- கிழக்கிலுள்ள பின்தங்கிய கிராமங்கள் இந்த அரசாங்கத்தினால் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யப்படுமென இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.**



மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடகிழக்கு மூன்று தசாப்தகால யுத்தத்தில் மிகமோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளாக பின்தங்கிய கிராமங்கள் இருக்கின்றன. அதனால்தான் பின்தங்கிய கிராமிய அபிவிருத்திக்கு என்னை ஒரு இராஜாங்க அமைச்சராக நியமித்திருக்கின்றார்கள்.

தற்போது கொரோனா வைரஸினுடைய தாக்கம் மிக மோசமாக இருந்தாலும் அதனைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கமானது வெற்றி கண்டு வருகின்றது. யாரும் பயப்படவேண்டிய அவசியமில்லை.

நாட்டின் சட்டதிட்டத்திற்கு மக்கள் கீழ்ப்படிந்து நடந்தால் சரி. அரசாங்கமானது கொரோனா வைரஸை முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும். அதில் அரசாங்கம் மிகத் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் சகல துறைகளும் இந்த விடயத்தில் மிகவும் உன்னிப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகையால் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். நாட்டில் மக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் மிகக் கவனமாக இருக்கின்றது என சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# வங்கி ஊழியர்கள் இருவருக்கு கொரோனா

(கொழும்பு)


வெள்ளவத்தையில் அமைந்துள்ள தனியார் வங்கியில் பணியாற்றிய இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும் குறித்த அதிகாரிகளின் தாய்மார்களுக்கும் கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக பிலியந்தல சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனேமுல்ல பகுதியில் உள்ள வங்கிக் கிளையில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் வெள்ளவத்தையில் அமைந்துள்ள வங்கி கிளைக்கு அண்மையில் வந்து சென்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனை அடுத்து, வெள்ளவத்தை கிளையில் உள்ளவர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே, குறித்த இரு அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது. (ஐ-4)

# தீக்கிரையான கடை



(தலவாக்கலை)

தலவாக்கலை நகரில் இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள சில்லறை கடை ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் கடை முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து நேற்றுக் காலை 6 மணியளவில் ஏற்பட்டது.

தலவாக்கலை பொலிஸார், மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் ஒரு மணித்தியாலத்துக்குப் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (ஐ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2147

### தர்சன்




### ருசாந்தன்




### மேனகா




### அஸ்வின்




### சுஜீபா




### றோசானி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 17.10.2020 - 15.11.2020



சார்வரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் சுக ஸ்தானத்தில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். இருப்பினும் புதன் உச்சம்பெற்றிருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகளவில் ஏற்படாது. கண்டகச் சனியின் ஆதிக்கம் இருந்தாலும் கூட, குருவின் நேரடிப் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது.

**நீச்சம் பெறும் சுக்கிரன்**

இதுவரை சிம்ம ராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒக்டோபர் 23ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். அங்கே அவர் நீச்சம் பெற்றாலும் உச்சம் பெற்ற புதனோடு இணைந்து 'நீச்சபங்க ராஜ யோக' அடிப்படையில் சில நல்ல வாய்ப்புகளை உங்களுக்கு வழங்குவார். குறிப்பாக 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் விலகும். தூர தேசத்திலுள்ள உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வரும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஒக்டோபர் 26ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் மீன இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 10ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது, தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். வீட்டுப் பராமரிப்பில் கவனம் செலுத்துவீர்கள். மண், பூமி சம்பந்தப்பட்ட வகையில் இருந்த பிரச்சினை அகலும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பர். உயர்பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு ஒரு நல்ல காரியம் நடைபெறலாம்.

**புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்**

ஒக்டோபர் 27ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக்கிர நிவர்த்தியாகின்றார். எனவே ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். உறவினர்களும், நண்பர்களும் போட்டி போட்டுக்கொண்டு உதவ முன்வருவர். புதிய ஒப்பந்தங்களும் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நவம்பர் 4 ஆம் திகதி, புதன் துலாம்




இராசிக்குச் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு புதன் இணையும் பொழுது 'புத-ஆதித்ய யோகம்' உருவாகின்றது. எனவே அரசியலில் இருப்பவர்களுக்கு ஒரு பிரகாசமான வாய்ப்பு வரப்போகின்றது.

**மகர குருவின் சஞ்சாரம்**

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். மகர ராசி குருவிற்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான் நீச்சம் பெறுவது நன்மைதான். மகரத்தில் இருக்கும்போது குருவின் பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே வீட்டுப் பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய்வழி ஆதரவு உண்டு. உத்தியோகம் சம்பந்தமாக தூரதேசப் பயணங்கள் ஏற்படும். குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் லட்சுமி நரசிம்மரை வழிபடுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஆதரவுக்கரம் நீட்டுவோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். வேலை பார்க்கும் மற்றும் சுயதொழில் செய்யும் பெண்கள் உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். தன்னம்பிக்கைக்கு தக்க பலன் கிடைக்கும். கணவன்-மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். தாய் மற்றும் உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பணிபுரியும் பெண்களுக்கு மறுக்கப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படும். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

## தன்னம்பிக்கைக்கு தக்க பலன் கிடைக்கும்!

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



சார்வரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் தனாதிபதி சூரியனோடு இணைந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். செவ்வாயின் பார்வை சந்திர-சூரியர் மீது பதிகின்றது. கிரகங்கள் சாதகமான நிலையில் இருப்பதால், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் தற்காலிகப் பணியாளர்களாக இருப்பவர்கள், நிரந்தரப்பணியாளர்களாக மாறலாம்.

**நீச்சம் பெறும் சுக்கிரன்**

இதுவரை சிம்ம இராசியில் சஞ்சரித்து வந்த சுக்ரன், ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெற்றாலும் உச்சம் பெற்ற புதனோடு இணைந்து 'நீச்ச பங்க ராஜ யோகத்தை உருவாக்குகின்றார். எனவே வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். வெளிநாட்டிலிருந்து உத்தியோகம் சம்பந்தமாக அழைப்புகள் வரலாம். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்புக் கிடைக்கும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஒக்டோபர் 26 ஆம் திகதி மீன இராசிக்கு வக்கிர இயக்கமாகச் செல்கின்றார். யோககாரகனாக விளங்கும் செவ்வாய் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பார். வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் கைகூடிவரும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் யோகம் கூட ஒரு சிலருக்கு உண்டு. பூர்வீக சொத்துக்களை பங்கிட்டுக் கொள்வதில் உடன்பாடு ஏற்படும்.

**புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்**

ஒக்டோபர் 27 ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக் கிர நிவர்த்தியாகின் றார். 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் பலம் பெறும் இந்த நேரத்தில், வழக்குகள் சாதகமாக முடியும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். முன்னோர்கள் கட்டிவைத்து சிதிலமடைந்த ஆலயங்களைப் பராமரிக்கும் வாய்ப்பு கைகூடி வரும். நவ




ம்பர் 4 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு இணைவதால் 'புத ஆதித்ய யோகம்' செயற்படுகின்றது. எனவே பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**மகர குருவின் சஞ்சாரம்**

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவரது நேரடிப்பார்வை உங்கள் இராசியிலேயே பதியப் போகின்றது. எனவே உத்தியோகம், தொழில் போன்றவற்றில் நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் வெற்றிபெறும். மாற்று வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கப் போகின்றது.

இம்மாதம் பௌர்ணமி அன்று இல்லத்து பூஜையறையில் காமாட்சியம்மன் விருத்தம் பாடி வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும் நேரமிது. உறவினர்கள் மூலம் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள்.

கண வன்-மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் கடன் சுமை குறைய வழிவகுப்பர். தொழில் மேம்படும். பணிபுரியும் இடத்தில் பாராட்டும், புகழும் குவியும். நீங்கள் கேட்காமலேயே மேலதிகாரிகள் சலுகைகளை வழங்கலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேற அனுமனை வழிபடுவது நல்லது.

## உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்து முடிப்பீர்கள்!

(தொடரும்)

# 26 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு திரும்ப முடியாமல் டோஹா கட்டாரில் சிக்கியிருந்த 26 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நாடு திரும்பினர். இதனையடுத்து அவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து. அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது. (ஜ-4)



# ஆன்மீகம்

## கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகட்டும்!

சுற்று முற்றும் பார்த்து விட்டு அந்த விக்கிரகத்தை கடற்கரை மணலில் ஒரு இடத்தில் கொஞ்சம் பள்ளம் தோண்டி அதில் வைத்து, அடையாளம் தெரிவதற்காக அந்தப் பகுதி மண்ணில் லிங்கம் மாதிரி ஒரு வடிவம் செய்தார்.

இனி நிம்மதியாக நீராடலாம் என்று எண்ணியவாறே ஸ்நானம் செய்யப் புறப்பட்டார். சாஸ்திரிகள் லிங்கம் செய்து, பின் குளிக்கச் சென்றதை தூரத்தில் இருந்து கவனித்தார் ஒருவர். ஆனால் சாஸ்திரிகள் விக்ரகத்தை வைத்ததைக் கவனிக்காத அவர் எண்ணினார்: 'பெரிய வேதாகமப் பண்டிதர்.

மணலில் லிங்க வடிவம் செய்து பின் குளிக்கப் போகிறார். கிரகண காலத்தில் புண்ணிய ஸ்நானம் செய்யும் போது இப்படி சிவலிங்க வடிவம் செய்து, தியானித்து, பின்னர்தான் நீராட வேண்டும் போல் இருக்கிறது. இப்போதாவது தெரிந்து கொண்டேனே.' அவரும் சாஸ்திரிகள் செய்த லிங்கம் பக்கத்திலேயே இன்னொரு மணல் லிங்கம் செய்தார். இதைக் கண்ணுற்ற இன்னொரு பக்தரும் பக்கத்திலேயே இன்னொரு லிங்கம் செய்ய, அதைப் பார்த்த இன்னொரு சுற்றுலாக் குழுவினரும் ஆளுக்கொரு லிங்கம் செய்ய கடற்கரை மணலில் நூற்றுக்கணக்கான லிங்கங்கள்!

குளித்துத் திரும்பிய பண்டிதர் குழம்பிப் போனார். 'இந்த உலகில் மக்களிடம் ஆராய்ச்சி மனோபாவம் அறவே இல்லாமல் போய் விட்டதே! இதை ஏன் செய்ய வேண்டும் என்ற சிந்தனையே இல்லையே! முட்டாள்தனமாக ஒன்றை அப்படியே பின்பற்றுபவர்களால் என் பிள்ளையார் விக்ரகத்தை நான் பறி கொடுத்துத்தான் மிச்சம். ஆனைமுகனே! இவர்களுக்கு ஆராய்ச்சி அறிவைக் கொடு,' என்று வேதனையுடன் வேண்டிக்கொண்டார். திருவருட்பிரகாச ராமலிங்க அடிகள் தன் திருவருட்பாவில் இப்படிக் கூறுகிறார்: 'கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண் மூடிப் போக!'

கண்மூடித்தனமாக எதையும் ஏற்றுக் கொள்வதும், கண் திறந்து பார்க்காமல் எதையும் புறக்கணித்து விடுவதும் ஒருபோதும் சரியல்ல.


நாம் கண்ட காட்சி உண்மையாக இருந்தாலும், நம்பக்கூடிய ஒருவர் சொன்னதை நாம் கேட்டாலும் அதை பலமுறை ஆராய்ந்து சந்தேகம் தெளிவு பெறுவதை நாம் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நேரில் அந்த இடத்தில் என் இரண்டு விழிகளாலும் நிஜமாக நான் பார்த்தது எப்படிப் பொய்யாகும் என நாம் நினைத்தால் அதற்கும் பதில் தருகிறது நம் அற்புதமான இதிகாசம். ராமதாசர் ராமாயணம் எழுதியவாறே தன் பக்தர்களுக்கு அதைப் படித்து விளக்கியும் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் ராமதாசர் 'அனுமன் அசோக வனத்தை அடைந்தபோது அங்கே எங்கும் வெள்ளை நிற மலர்கள் பூத்திருப்பதைப் பார்த்தார்' என்று படித்தார். உடனே ராமதாசர் முன்னிலையில் அனுமன் தோன்றி ('ராமாயணம் எங்கு நிகழ்ந்தாலும் அங்கு ஆஞ்சநேயர் இருப்பார்' என்பது நாம் அனைவரும் அறிந்தது தானே!) 'அசோக வனத்தில் நான் கண்டவை சிவப்பு மலர்கள்தான்!

வெள்ளை புஷ்பங்கள் என்பதை மாற்றி செந்நிற மலர்கள் என எழுதுங்கள்' என்றார். ராமதாசரோ 'நான் எழுதியது சரியே! திருத்தம் செய்ய மாட்டேன்' என்றார். 'கண்ணால் கண்டவன் நான்! நான் சொல்வது எப்படிப் பிழையாகும்?' என்று சினமடைந்தார் அனுமன். இறுதியாக இவ்விவாதம் ராமபிரானிடம் சென்றது. ராமர் தீர்ப்பு சொன்னார்: "பூக்கள் என்னவோ வெள்ளைதான். ஆனால் அப்போது ராவணன் மேல் கொண்ட கோபத்தால் சிவந்திருந்த கண்களோடு அனுமன் இருந்தான். அதனால் அவை சிவப்பு மலர்களாக அவனுக்குத் தெரிந்தன." எதையும் ஆற அமர அணுகி தீர விசாரித்து ஏற்பதுவே வாழ்வின் சாரம். சரிதானே?

# செய்தித்துளிகள்

## மீன்பிடி பூனையின் சடலம் மீட்பு



(கொழும்பு)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை நாவலப்பிட்டி பிரதான வீதியில் கெலிவத்தை தமிழ் வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள தேயிலை மலையில் நேற்று முன்தினம் பிற்பகல் சுமார் இரண்டடி நீளமான மீன் பிடி பூனையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்தே குறித்த மீன்பிடி பூனையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த மீன் பிடி பூனையை விச உணவு உட் கொண்டு உயிரிழந்துள்ளதா அல்லது எவரேனும் கொன்றுவிட்டனரா? என்பது தொடர்பாக பத்தனை பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

## மிருகக்காட்சிச்சாலைகள் பூட்டு

(கொழும்பு)


கொரோனா தொற்று நிலைமை காரணமாக நாட்டிலுள்ள அனைத்து மிருகக்காட்சிசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. இதன்படி, அனைத்து மிருகக்காட்சி சாலைகளையும் இன்று முதல் மூடுவதற்கு அறிவுறுத்தியுள்ளதாக அவ்விடத்திற்குப் பொறுப்பான அமைச்சர் விமலவீர திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, பூங்காக்களுக்கு உள்நுழைவதை மட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 160 |
| தக்காளி | 160 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 80 |
| கோவா | 130 | 120 | 120 |
| கரட் | 160 | 170 | 200 |
| பூசணி | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 220-240 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 120-180 | 160 |
| பாகற்காய் | 260 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 90 | 100 | 100 |
| பயற்றங்காய் | 120 | 90 | 140 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 90 | 100 | 80 |
| கறிமிளகாய் | 260 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 180 | 120 | 100 |
| போஞ்சி | 200 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 180 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 300 | -- | 350 |
| வெங்காயப்பூ | 250 | -- | 280 |
| முள்ளங்கி | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 35 | 50 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | -- | -- |




# பாசமுள்ள சிறுவன்



மாட்டுக்காரன் ஒருவர் தன் பசுவோடு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்.

அமைதியாக நடந்து வந்த பசு திடீரென அடம் பிடித்து நடுரோட்டில் அமர்ந்து கொண்டது.

சிறியளவிலான அந்த ரோட்டில் வாகனங்கள் எதுவும் செல்ல முடியாத படி பசு நடுரோட்டில் படுத்திருந்தது.

மாட்டுக்காரன் எவ்வளவு முயற்சி செய்தும் அந்தப் பசுவை எழுப்ப முடியவில்லை.

அந்த வழியாக ஒரு பொலிஸ்காரர் வந்தார். தன்னுடைய முரட்டு மீசையையும் கையிலிருந்த லத்தியையும் வைத்து மிரட்டிப் பார்த்தார்.

மாட்டுக்காரனுடன் சேர்ந்து பசுவை இழுத்துப் பார்த்தார். பசு அசையவில்லை

அப்போது ஐஸ்கிறீம் விற்கும் நபர் ஒருவர் அந்த வழியாக வந்தார். குளிர்ச்சியாகப் பேசிப் பார்த்தார். நகராமல் இருந்த பசுவை மூவரும் சேர்ந்து இழுத்தனர்.

மல்யுத்த போட்டியொன்றில் வெற்றிபெற்று திரும்பிக் கொண்டிருந்த வீரர் ஒருவர் அந்த வழியாக வந்தார். ஒரு பசுவை ரோட்டிலிருந்து மூன்று பேர் நகர்த்துவதைப் பார்த்து நகைத்தார்.


மூன்று பேரையும் நகரச் சொல்லிவிட்டு மல்யுத்த வீரர் தனித்து மாட்டை இழுத்துப் பார்த்தார். பசு அசரவில்லை.

அந்த வழியாக ஒரு சிறுவன் வந்தான். அவன் ரோட்டருகே வளர்ந்து நின்ற புற்களை பறித்து கட்டாக கட்டி பசுவிற்கு கொடுத்தான். பசு புல்லை சாப்பிட எழுந்தது. சிறுவன் புல்லை பசுவிடம் காட்டிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். பசுவும் அவனோடு நகர்ந்தது.

**நீதி:**
**அன்பால் எதையும் சாதிக்கலாம்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## பின்கதைச் சுருக்கம்



ராஜராஜன் அரண்மனை

எல்லாவற்றையும் இடித்துத் தரை மட்டமாக்கிவிட்டு ஊருக்குத் திரும்பிப் போகவில்லை. பாண்டியர்களை அவமானப்படுத்தி அதை வரலாற்றில் பதிவு செய்ய வேண்டும் என்கின்ற குரூர எண்ணம் அவருக்கு வந்தது.

கழுதைகளைக் கொண்டு ஏர் உழுது, கதிர் விளையா வரகினை விதைத்தார். முடிந்தவரை பாண்டியர்களுக்குச் சேதாரம் செய்துவிட்டு நாடு திரும்பினார். இவை அத்தனையும் கி.பி 1202 க்கு முன்னால் நடந்து முடிந்தன.

மேலெழுந்த வாரியாகப் பாண்டியர்களின் வேகம் அடங்கியது என்றாலும் எந்த விநாடியும் பீறிக் கொண்டு வரக்கூடும் என்பது நன்கு தெரிந்தது. அது, அடுத்தடுத்த ஆண்டுகளில் ஊர்ஜிதமானது.

மூன்றாம் குலோத்துங்க சோழன் இறந்த பிறகு, கி.பி 1218 இல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்தார். உறையூரையும் தஞ்சாவூரையும் தீயிட்டு அழித்தார்.

சோழர்களின் அதிகாரம் இல்லாத பகுதியாகத் தஞ்சை ஆகிப் போனதால், அதைக் கைப்பற்றுவது சுலபமான வேலையாக ஆகிப் போனது.

எப்படி மதுரை அழிக்கப்பட்டதோ அதே பாணியில் தஞ்சையையும் சுக்குநூறாக்கினார்கள்.

ராஜராஜன் வாழ்ந்த அரண்மனை முதல் அத்தனை அரசு மாளிகைகளும் அரசு அலுவலகங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. இந்த ஒரே தாக்குதலில் ராஜராஜனின் முக்கிய அடையாளங்களாக இருந்திருக்க வேண்டிய அரண்மனை ஒரே நாளில் இருந்த இடத்தில் காணாமல் போனது.

சேதார வேலை முடிந்த பிறகு, நந்திபுரத்தின் ஆயிரத்தளி அரண்மனையில் வீராபிஷேகம் செய்து கொண்டார் மாறவர்மன் சுந்தர பாண்டியன். ராஜராஜன் அரண்மனை இருந்த இடத்தில், அங்கு கழுதை கொண்டு ஏர் உழுது, வரகு விதைத்து விட்டுப் போனார்கள்.

தன்னைப் புகழ்ந்து பட்டினப்பாலை என்னும் நூலை இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்கின்ற புலவருக்குக் கரிகால சோழன் பரிசாகக் கொடுத்த பதினாறு கால் மண்டபம், பெரிய கோயில் ஆகிய இரு கட்டடங்களைத் தவிர தஞ்சையின் அத்தனை முக்கிய கட்டடங்களும் அழிக்கப்பட்டன.

போரின் கொடுமையான முகத்தை ஒரே படையெடுப்பில் காட்டிவிட்டுப் போனார்கள் பாண்டியர்கள். கி.பி 850 இல் தஞ்சையின் தலைநகராகி, 1014 இல் சோழ மன்னனாலேயே புறக்கணிக்கப்பட்டு, கி.பி 1218 இல் சுக்குநூறாகிப் போனது தஞ்சாவூர் பின்னால் சோழப் பரம்பரைக்கும் இதே கதி தான் நேர்ந்தது.

(தொடரும்)

மனிதனுடைய மனோசக்தியைத் தன்வயப்படுத்தி, பயன்படுத்தத்தக்க முறையில் செலுத்துவதே, கல்வி எனப்படும். – போனஸ் அயர்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valamburii.lk

## இந்தியாவைச் சிக்கெனப் பிடித்தால் எங்கெழுந்தருளுமே!

சிக்கெனப் பிடித்தேன் என்பது மணிவாசகர் கையாளும் சொல்லாடல்.

சிக்கெனப் பிடித்தல் என்றால் என்ன? என்ற கேள்வி எழும்.

சிக்கெனப் பிடித்தல் என்பது இறுகப் பிடித்தல் அல்லது பற்றிப் பிடித்தல் எனப் பொருள் கொள்ளப்படும்.

இங்கு சிவனைச் சிக்கெனப் பிடித்த மணிவாசகர் இனி எங்கெழுந்தருளுவது இனியே! என்கிறார்.

ஆக, சிக்கெனப் பிடித்தல் என்பது கருத்தூன்றிக் கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வருகின்ற எந்த அரசாங்கத்தாலும் எதுவும் ஆகமாட்டாது என்பது நிறுதிட்டமான உண்மையாயிற்று.

அதேநேரம், தமிழ் மக்களின் பிரச்சினைகளை மனிதநேயத்தோடு பார்க்கின்ற பக்குவம் சிங்கள மக்களுக்கும் ஏற்படப் போவதில்லை.

கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுவதற்காகத் துறவு பூண்ட பௌத்த பிக்குகளே கொல் என்றும் கொலை என்றும் கூறுகையில், தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளையோ அன்றி தமிழ் மக்கள் படுகின்ற துன்பியலையோ சிங்களத் தரப்புகள் நியாயபூர்வமாகப் பார்க்கப் போவதில்லை என்பது கண்கூடு.

எனவே ஈழத் தமிழர்களுக்கு இருக்கக் கூடிய ஒரேயொரு துணை சர்வதேசம் மட்டுமே. அதிலும் நம் அண்டை நாடான இந்தியா எங்களுக்கான பக்கபலம் எனலாம்.

எனவே, இந்தியாவை நாம் சிக்கெனப் பிடித்தாக வேண்டும். அதிலும் இந்தியா மீதான எங்களின் நம்பிக்கையில் எந்தக் கீறும் ஏற்பட்டு விடாமல் இருப்பது அவசியம்.

தவிர, சமகால சூழ்நிலையில் கொரோனாத் தொற்று உலகம் முழுவதையும் திசை திருப்பியிருந்தாலும் உலக விவகாரங்கள், பிராந்தியப் போட்டிகள், ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் என்ற விடயங்கள் நடந்து கொண்டே இருக்கிறது.

அண்மையில் சீனத் தூதுக்குழு இலங்கைக்கு வந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவையும் பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியதுடன் நிதி உதவிகளையும் வழங்கியிருந்தது.

ஆக, குறித்த நாடுகளுக்கிடையேயான பரஸ்பர உறவுகள் மிகக் கவனமாகப் பேணப்படுவதையும் நாம் அவதானிக்க முடிகிறது.

அதிலும் அண்மைக்காலமாக இலங்கையின் ஊடல் சீனாவுடன் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடியும்.

இந்த நிலைமை அண்டை நாடான இந்தியாவுக்கு உடன்பாடானதாக இருக்காது.

எனவே அண்மைக்காலமாக இந்தியாவை வலிந்து பகைக்கின்ற இலங்கையின் போக்கு ஈழத் தமிழர்களுக்கான நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

இச்சந்தர்ப்பத்தை தக்கமுறையில் பயன்படுத்துவதிலேயே எங்களின் இராஜதந்திர வெற்றி தங்கியுள்ளது.

### யாழ்.பருத்தித்துறை கட்டைக்காடு பகுதியில்

# வீதி புனரமைப்பில் ஈடுபட்டிருந்த ஒருவருக்கு திடீர் சுகயீனம்

## பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை - கட்டைக்காடு வீதி புனரமைப்புப் பணியில் கனரக வாகன சாரதியாக பணியாற்றிய ஒருவர் திடீர் சுகயீனமடைந்த நிலையில் அவருடன் சுமார் 80 பேர் வரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, பருத்தித்துறை - கட்டைக்காடு வீதியின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகளில் கனரக வாகன சாரதியாக பணியாற்றும் ஒருவர் அண்மையில் தென்பகுதிக்குச் சென்று திரும்பியிருந்த நிலையில் திடீர் சுகயீனமடைந்துள்ளார். இதனையடுத்து அவரும், அவருடன் பழகியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சுகயீனமடைந்தவருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்றில்லை என முடிவுகள் கிடைத்துள்ளதாக கூறியிருக்கும் வடமராட்சி கிழக்கு மருத்துவ அதிகாரி பணிமனை மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறியுள்ளது. இந்நிலையில் மக்கள் அநாவசியமாக பீதியடையத் தேவையில்லை. என மருத்துவ அதிகாரி பணிமனை கூறியுள்ளது. இதேவேளை வீதி அபிவிருத்தி பணிகள் யாவும் நிறுத்தப்பட்டிருக்கின்றது. (ஞா)

### மன்னார் பொலிஸ் நிலைய

# பொறுப்பதிகாரி கண்டிக்கு மாற்றம்

(மன்னார்)

மன்னார் பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரியாக கடந்த 2 வருடங்களாகக் கடமையாற்றிய எஸ்.கிருஸாந்தன் நேற்று கண்டிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நொச்சியாகம பகுதியை சேர்ந்த சி.ஏ.ஜெயதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரியாக கடந்த 2 வருடங்களாகக் கடமையாற்றிய எஸ்.கிருஸாந்தன், மாவட்டத்தில் பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

குறிப்பாக பல வருடங்களின் பின்னர் தமிழராக ஒருவர் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட நிலையில் மக்களிடம் அன்பாகவும் பண்புடனும் தனது கடமையினை மேற்கொண்டுள்ளார்.

போதைப்பொருள் தடுப்பு, விழிப்புக்குழு அமைத்தல் மற்றும் தற்போதைய கொரோனா அச்சுறுத்தல் கால கட்டத்தில் மக்களின் பிரச்சினைகளை உரிய முறையில் அணுகி தீர்த்து வைத்து மன்னார் மக்களிடம் நன் மதிப்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

அடக்கம் ஒரு அணிகலன் மட்டுமல்ல. அது ஒழுக்கத்தின் பாதுகாப்பும் நல்வாழ்வின் கவசமும் ஆகும். -அடிசன்

### யாழ்.பல்கலையில் அமைக்கப்பட்டுள்ள

# விவசாய ஆய்வு மையத்தை திறப்பதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில், ஜெய்க்கா செயற்றிட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட விவசாய ஆய்வுகள் மற்றும் பயிற்சிக்கான ஆய்வு மையக் கட்டடத் தொகுதி எதிர்வரும் 31 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் இதன் கட்டட மற்றும் அமைப்பு வேலைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், திறப்பு விழா ஒழுங்கமைப்பில் காணப்பட்ட இழுபறி நிலையினால் மிக நீண்ட காலமாகப் பாவனைக்கு விடப்படாமல் இருந்து வந்தது.

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் கீழ் 1.6 பில்லியன் ஜப்பானிய ஜென் (இலங்கை ரூபாயில் 2.2 பில்லியன்) பெறுமதிக்கு, கட்டடங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் நவீன விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

கட்டுமானப் பணிகள் கடந்த வருடம் நிறைவு பெற்ற பின்னரும், பாவனைக்கு விடாதமை குறித்துக் கவலையடைந்த ஜப்பானிய அரசாங்கம், அதனை விரைவில் திறந்து பாவனைக்கு விடுமாறு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அழுத்தம் கொடுத்ததையடுத்து, இந்தக் கட்டடத் தொகுதியை எதிர்வரும் 31 ஆம் திகதி திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கட்டடத் தொகுதித் திறப்பு விழாவுக்கு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இலங்கைக்கான ஜப்பானிய உயர்ஸ்தானிகர் அகிரா சுகியமா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, கடற்றொழில், நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ஞா)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உன்னை நீயே அறிவாய்



இரும்பு ஒரு கரண்டியாக்கப்பட்டிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு இரும்பு என்றாலும் கரண்டி என்றாலும் அது ஒரு பொருளையே குறிக்கும். அதுபோல் தெய்வம் என்ற அருட்பேராற்றலே பேரியக்க மண்டலத்தில் இயங்கும் எல்லாமாக இருக்கிறது. நீயுமாக மனித வடிவமாக இருப்பதும் அதுவே. இந்தக் கருத்தில் மனத்தைப் பதித்துக் கொண்டு உண்மையை உணர்ந்து கொள். நீயென்றாலும் தெய்வமென்றாலும் ஒரு பொருளையே குறிக்கும்.

கரண்டியை உருக்கிவிட்டால் இரும்புக்குக் கொடுத்த வடிவம் மறைந்து விடுகிறது. அவ்விரும்புக்கு கரண்டி என்று கொடுத்த பெயர் மறைந்து விடுகிறது. என்ன மிச்சம்? இரும்பு தான். இரும்பைப் பல வடிவங்களாக்கி, பெயர்களை அக்கருவிக்குக் கொடுக்கிறோம். வடிவத்தையும் பெயரையும் கழித்துவிட்டால் மிஞ்சுவது இரும்புதானே!

அதேபோன்று, நீ உன்னையறிந்து கொள்ள முயற்சி செய்! மனிதனென்ற வடிவத்தையும், உன் செயல் பதிவுகளாக உள்ள வினைப்பதிவுகளையும் கழித்துப் பார்! உன்னில் மிஞ்சுவது எல்லாம் வல்ல அருட்பேராற்றலாக விளங்கும் பரம்பொருளே.

# டிவில்லியர்ஸ் அபார ஆட்டம்; பெங்களூர் அதிரடி வெற்றி


ஐ.பி.எல்.தொடரின் 33 ஆவது லீக் ஆட்டம் டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

டொஸ் வென்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி கப்டன் ஸ்டீவ் சுமித் பட்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி, ராபின் உத்தப்பா, பென் ஸ்டோக்ஸ் ராஜஸ்தான் அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளான ராபின் உத்தப்பா ஆரம்பம் முதலே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

ராஜஸ்தான் 5.4 ஓவரில் 50 ரன்களை எடுத்த நிலையில் தொடக்க வீரரான ஸ்டோக்ஸ் 15 ரன்னில் வெளியேறினார்.

22 பந்துகளை சந்தித்த உத்தப்பா 7 பவுண்டரிகள், 1 சிக்சர் உட்பட 41 ரன்கள் குவித்து சாஹல் பந்து வீச்சில் வெளியேறினார்.



அடுத்து வந்த சஞ்சு சாம்சன் 9 ரன்னில் வெளியேறினார்.

7.5 ஓவரில் 3 விக்கெட்டுகளை இழந்து 69 ரன்கள் எடுத்த நிலையில் ராஜஸ்தான் அணி சற்று தடுமாறியது. அடுத்துவந்த கப்டன் ஸ்டீவ் ஸ்மித், ஜோஸ் பட்லர் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஸ்கோரை உயர்த்தினர்.

25 பந்துகளை சந்தித்த பட்லர் 24 ரன்கள் எடுத்த நிலையில் மோரிஸ் பந்து வீச்சில் வெளியேறினார். 36 பந்துகளை சந்தித்த ஸ்டீவ் ஸ்மித் 1 சிக்சர், 6 பவுண்டரிகள் உட்பட 57 ரன்கள் குவித்து மோரிஸ் பந்தில் வெளியேறினார்.

இறுதியாக 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்த ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 177 ரன்களை குவித்தது.

178 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தேவ்தத் படிக்கல், ஆரோன் பிஞ்ச் ஆகியோர் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

11 பந்துகளை சந்தித்த பிஞ்ச் 14 ரன்கள் எடுத்த நிலையில் ஸ்ரேயஷ் கோபால் பந்தில் வெளியேறினார். இதையடுத்து களமிறங்கிய கப்டன் கோலி, படிக்கல்லுடன் ஜோடி சேர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

37 பந்துகளை சந்தித்த படிக்கல் 2 பவுண்டரிகள் உட்பட 35 ரன்களுடன் ராகுல் தேவாட்டியா பந்து வீச்சில் அவுட் ஆகி வெளியேறினார். படிக்கல் வெளியேறிய உடனேயே 32 பந்தில் 43 ரன்கள் குவித்திருந்த கப்டன் கோலியும் கார்த்திக் தியாகி பந்து வீச்சில் வெளியேறினார்.


அடுத்ததாக களமிறங்கிய ஏபி டிவில்லியர்ஸ், குர்கித்ரட் சிங் மேனுடன் ஜோடி சேர்ந்தார். குர்கித்ரட் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், மறுமுனையில் டி வில்லியர்ஸ் ருத்ர தாண்டவம் ஆடினார்.

18 ஓவரில் 143 ரன்கள் எடுத்திருந்த பெங்களூர் அணி வெற்றிபெற 2 ஓவரில் 35 ரன்கள் தேவைப்பட்டது. 19 ஆவது ஓவரை வீசிய உனத் கட் பந்து வீச்சை டிவில்லியர்ஸ் புரட்டி எடுத்தார். அந்த ஓவரில் 3 சிக்சர்கள் உட்பட 25 ரன்கள் குவிந்தது.

இறுதியாக 19.4 ஓவரிலேயே பெங்களூர் அணி 179 ரன்களை எட்டியது. இதன் மூலம் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி அபார வெற்றி பெற்றது.

அதிரடியாக ஆடிய டிவில்லியர்ஸ் 22 பந்துகளில் 1 பவுண்டரி, 6 சிக்சர்கள் உட்பட 55 ரன்கள் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்று வெற்றிக்கு வழிவகுத்தார். (4)

# ஓய்வு பெறும் உமர் உல்



பாகிஸ்தான் கிரிக்கெட் வேகப்பந்து வீச்சாளரான உமர் குல் அனைத்து வகையிலான கிரிக்கெட் போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுவதாக டுவிட்டர் மூலம் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வேகப்பந்து வீச்சாளரான உமர் குல் ராவல்பிண்டியில் நடைபெறும் தேசிய 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் பலுசிஸ்தான் அணிக்காக விளையாடினார்.

அந்த அணி கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற தெற்கு பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வி கண்டு அரை இறுதி வாய்ப்பை இழந்தது.

இந்த நிலையில் 36 வயதான உமர் குல் அனைத்து வகையிலான கிரிக்கெட் போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுவதாக டுவிட்டர் மூலம் அறிவித்தார்.

உமர் குல் 2003 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பாகிஸ்தான் அணிக்காக விளையாடி 47 டெஸ்டில் 163 விக்கெட்டும், 130 ஒருநாள் போட்டியில் 179 விக்கெட்டும், 60 இருபது ஓவர் போட்டியில் 85 விக்கெட்டும் வீழ்த்தினார்.

2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துக்கு பிறகு சர்வதேச போட்டிக்கான அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட அவர் முதல் தர போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வந்தார்.

2009 ஆம் ஆண்டு 20 ஓவர் உலகக்கிண்ண போட்டியில் அபாரமான 'யார்க்கர்' பந்து வீச்சு மூலம் உமர் குல் 13 விக்கெட்டுகள் வீழ்த்தி பாகிஸ்தான் அணி கோப்பையை வென்றதில் முக்கிய பங்கு வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## தவானின் அதிரடி சதம்

# சென்னையை வீழ்த்தியது டெல்லி


ஐபிஎல் தொடரின் 34 ஆவது லீக் ஆட்டம் சார்ஜாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் டெல்லி கப்பிட்டல்ஸ் அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

டொஸ் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பட்டிங்கை தேர்வு செய்தது. சாம் கர்ரன் மற்றும் டு பிளசிஸ் அந்த அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

சாம் கர்ரன் டக் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். அடுத்துவந்த ஷேன் வோட்சன், டு பிளசிஸ் உடன் ஜோடி சேர்ந்தார்.

இருவரும் நிதானமாக ஆடி ரன்களை சேர்த்தனர். வோட்சன் 36 ரன்னில் வெளியேறினார். டு பிளசிஸ் அரைச்சதமடித்து அசத்தினார். அவர் 58 ரன்னில் ஆட்டமிழந்தார்.

கப்டன் டோனி 3 ரன்னில் வெளியேறினார். அம்பதி ராயுடு அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அடுத்துவந்த ஜடேஜா, ராயுடுவுடன் ஜோடி சேர்ந்து அதிரடி ரன் குவிப்பில் ஈடுபட்டார்.



இறுதியில், சென்னை அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுக்கு 179 ரன்கள் குவித்துள்ளது. அம்பதி ராயுடு 45 ரன்னுடனும், அதிரடியாக ஆடிய ஜடேஜா 13 பந்தில் 4 சிக்சர் உட்பட 33 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

180 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி அணி களமிறங்கியது. பிரித்வி ஷா, ஷிகர் தவான் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர்.

பிரித்வி ஷா முதல் ஓவரில் டக் அவுட்டானார். ரகானே 8 ரன்னில் வெளியேறினார்.

மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான தவான் பொறுப்புடன் ஆடினார். ஷ்ரேயஸ் அய்யரும் தவானும் சேர்ந்து 68 ரன்கள் சேர்த்தனர். அய்யர் 23 ரன்னில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இறங்கிய ஸ்டொய்னிஸ் 24 ரன்னிலும், அலெக்ஸ் கேரி 4 ரன்னிலும் வெளியேறினர். அதிரடியாக ஆடிய தவான் சதமடித்தார்.

இறுதியில் டெல்லி அணி 19.5 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 185 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. தவான் 101 ரன்னும், அக்சர் படேல் 21 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். (4)

## உயர்தர பரீட்சை...

பெற்று வருகிறார்.

அவருடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த மாணவி பரீட்சை எழுதுவதற்காக ஐ.டி.எச். மருத்துவமனையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம் கடந்த நாட்களில் குறித்த மாணவி பரீட்சை எழுதிய மண்டபத்தில் இருந்த மாணவர்களுக்கு பிரத்தியேக பரீட்சை மண்டபம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## கிழக்கிலும்...

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை நான்காவது நாளாக தேடி வரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கிழக்கு மாகாணத்துக்கும் குழுக்களை அனுப்பி வைத்துள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்ட சிஐடி குழுக்கள், பொத்துவில், அம்பாறை, சம்மாந்துறை, நிந்தவூர், கல்முனை பகுதிகளில் ரிஷாத் பதியுதீனுக்கு நெருக்கமானவர்களின் வீடுகளில் தேடுதல்களை நடத்தியுள்ளன.

கொழும்பு, புத்தளம், மன்னார் பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதல்களில் ரிஷாத் பதியுதீனைக் கைது செய்ய முடியாத நிலையிலேயே, சிஐடியினர் கிழக்கிலும் தமது தேடுதலை விரிவுபடுத்தியுள்ளனர்.

அம்பாறையில் உள்ள அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப் வீட்டுக்கும் சிஐடியினர் சென்று விசாரித்துள்ளனர்.

வேறு பல இடங்களில் சிஐடியினர் சாதாரண உடையில் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஞா)

## 5 பிக்குகளுக்கு...

கம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 26 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சேவையில் ஈடுபடும் சொகுசு பேருந்து உரிமையாளர், சாரதி, நடத்துநர், தாதியொருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

அந்த பேருந்தில் பிக்குகள் அநுராதபுரத்திற்கு யாத்திரை சென்று வந்துள்ளனர். இதையடுத்து 15ஆம் திகதி நடத்தப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவர்கள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். (ஞா)

## 4 கஞ்சா செடி...

ஒன்றும் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா, முருகனூர் பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் பின்பகுதியில் உள்ள தோட்டத்தில் வளர்க்கப்பட்ட 6 அடி உயரமான நான்கு கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை மீட்கப்பட்டது.

அத்துடன், குறித்த வீட்டின் பின்பகுதியில் ரவைகள் இடப்பட்டு சுடுவதற்கு தயாரான நிலையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை தயாரிப்பான துப்பாக்கி ஒன்றும் அதற்குரிய ரவைகளும் மீட்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் குறித்த வீட்டின் உரிமையாளரான 40 வயது குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஞா-250)

## 20ஐ நிறைவேற்...

கான பொறுப்பையேற்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இவ்விடயத்தில் தானே நேரில் களமிறங்கி வியூகம் வகுத்துச் செயற்படுகிறார் என்று அறிய முடிகின்றது.

இதன்படி சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இது சம்பந்தமாக ஏற்கெனவே பேச்சு நடத்தி ஆதரவு திரட்டியுள்ள கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று மாலை ஆளுங் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அதன்பின்னர் இன்றைய தினம் ஆளுங் கட்சி எம்.பிக்களையும் ஜனாதிபதி சந்தித்து இது சம்பந்தமாக கலந்துரையாடவுள்ளார்.

அதேவேளை, இவ்விரு சந்திப்புக்களின் போதும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் 20ஆவது திருத்தத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு இறுதி முடிவெடுக்கப்படும்.

இவ்வாறு நடைபெறும் சந்திப்புக்களில் இறுதி முடிவு எட்டப்பட்ட பின்னர் சர்வமதத் தலைவர்களைச் சந்தித்து ஜனாதிபதி 20 இன் முக்கியத்துவம் பற்றி விளக்கமளிப்பார் எனவும், புதிய அரசமைப்பு உருவாவதற்கான கால எல்லை குறித்த உத்தரவாதத்தை வழங்குவார் எனவும் ஆளுங் கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்ட வரைபை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2015ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன நேரில் களமிறங்கினார்.

விவாதம் நடைபெற்ற நாட்களில் பாராளுமன்றத்தில் முகாமிட்டு தங்கி ஆதரவு திரட்டினார்.

தற்போது அதேபோன்றதொரு வியூகத்தை கையாள வேண்டிய நிலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் கோட்டாபயவின் சந்திப்புக்கு முன்னர் மகிந்தவும் தமது ஆதரவுத் தரப்பினைத் தனியாகச் சந்திக்கவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது. (ஞா)



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சுகந்தினி முருகையா

பிறப்பு 23.06.1987 இறப்பு 12.10.2018

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டு இரண்டு ஆண்டுகள்
கடந்து விட்டாலும் உங்கள்
நினைவுகள் எங்களை விட்டகலாது.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (4412) குடும்பத்தினர்

## வெளிமாவட்ட...

துள்ளோம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம்- திருநெல்வேலியில் கட்சியின் மக்கள் தொடர்பகத்தை திறந்து வைத்து உரையாற்றிய போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணி அபகரிப்பு தொடர்பாக ஒரு கலந்துரையாடலை முல்லைத்தீவில் நடத்துவது பற்றி நான் திட்டமிட்டேன். ஆனால் கொரோனாவை காரணம் காட்டி அரசாங்கம் தடை போடலாம், கொரோனாவால் மக்கள் கூட பின் நிற்பார்கள் என பலரும் சந்தேகம் தெரிவித்தார்கள்.

சூம் மூலமாக கருத்தரங்கத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவது பற்றியும் யோசிக்கிறேன். விரைவில் அது பற்றி அறிவிப்பேன். எமது காணிகள் வேகமாக ஆக்கிரமிக்கப்படுகிறது. அதிகார பீடத்தின் ஆசியுடன் மண் அகழ்வு, மரம் வெட்டல், வளசூறையாடல்கள் நடக்கிறது. வடக்கிலும், கிழக்கிலும் இது நடக்கிறது. இதைத் தடுக்க மக்களிற்கு போதிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும்.

நாம் வழக்குகளும் பதிய வேண் டும். நாம் தோற்றாலும் அவற்றின் தீர்ப்புக்கள், தீர்மானங்கள் இங்குள்ள நிலைமையை சர்வதேசத்திற்கு எடுத் துக்காட்டும். வடக்கு - கிழக்கு காணிகளை வெளிமாவட்ட சிங்களவர்களிற்கு பகிர்ந்தளிப்பதை எப்படியாவது தடுக்க வேண்டும்.

அரச காணிகளில் இராணுவத்தினர் இருக்கலாமென கூறினால், எதிர்காலத்தில் அவர்களின் குடும்பங்களையும் இங்கு இருத்தி, அவர்களிற்கு வாக்கு வழங்குவார்கள். இதற்காக ஒரு சட்டத்தரணிகள் குழுவை அமைத்துள்ளோம் என்றார். (ஞா)


### தன நிதானய
திகதி - 2020.10.18
சீட்டிழுப்பு இலக்கம் - 330
ஆங்கில எழுத்து: L — வெற்றி இலக்கங்கள்: 08 43 57 59
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### மெகா பவர்
திகதி 18/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0646
வெற்றி எழுத்து E — சுப்பர் இலக்க 22 — வெற்றி இலக்கங்கள் 4 38 41 50

### கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 18-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2574
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 47 48 56 74
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத
திகதி 2020/10/18
சீட்டிழுப்பு இலக்கம் 4279
ஆங்கில எழுத்து W — வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 8 8 6 4 7
தேசிய லொத்தர் சபை

### செவன
திகதி 18/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 305
ஆங்கில எழுத்து T — வெல்லப்பட்ட இலக்கங்கள் 13 18 66 67
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### ராசி அதிர்ஷ்டம்
திகதி 18/10/2020 — வெற்றி வாரம் 2956
சுப்பர் ஜக்பொட் ரூ. 23,46,298 — வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 10 18 33 58 — இடபம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
ரூ.500 பரிசுக்குரிய 8824
ரூ.100 பரிசுக்குரிய 970
விசேட இல.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,723, 440

### அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1075
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 79,240,550/-
வெற்றி இலக்கங்கள் 38 43 68 73 — ஆங்கில எழுத்து Y
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.18
சீட்டிழுப்பு இல. : 3405
வர்ணம் : இளஞ்சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,579,621.30
வெற்றி இலக்கங்கள் 11 24 27 54 — ஆங்கில எழுத்து L
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7539
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1249 — நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 18.10.2020 — தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் B 11 12 13 20
SUPER 500 விசேட இலக்கம் 6 2 1 5
50,320,798
அபிவிருத்தி லொத்தர் சபை

### கப்ருக
சீட்டிழுப்பு வாரம் 639
வர்ணம் மஞ்சள்
திகதி 18.10 2020 ஞாயிற்றுக்கிழமை
R 16 29 55 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,528,260
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன (C-308)
2022ல் நீங்களும் அமெரிக்காவில்..
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt


## தொற்றாளர்கள்...

யுள்ளதால், எதிர்வரும் வாரமும் முக்கிய மானது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தநிலையில் தொற்றாளிகளுக்கு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த நிலையில் இதுவரை கண்டறியப்படாத கொரோனாத் தொற்றாளிகள் அடுத்த வாரம் அடையாளம் காணப் படலாம்" என்றும் அவர் கூறியுள்ளார். (ஞா)

## 3 பேருக்கு ...

களிலிருந்தும் 160 பேருக்கான கொரோனாப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் வவுனியா மாவட்டத்தில் தற்காலிகமாகத் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ஞா-18)


மணமகள் தேவை
இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)
Jeyaratnam1988@gmail.com 077 219 4331


## நேற்றும் 63 ...

கண்டறியப்பட்டுள்ளனர்.

இதன்படி மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை பெண் ஊழியரின் கொரோனாத் தொற்றுக்காரணமாக தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 2,077 ஆக உயர்ந்துள்ளது. (ஞா)


மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-505)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (4409)
தொடர்பு: றாஜ் - 077 679 6623



விற்பனைக்கு
பளை, முகமாலையில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தும்புத் தொழிற்சாலை (Husk Chips) விற்பனைக்கு உண்டு. (4294)
தொடர்பு -076 008 6185



அமெரிக்கா லொத்தர் விசா
2021ம் ஆண்டுக்கான விசா பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
பாஸ்போட் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்,
அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்.
விசா மற்றும் பொதிகள் சேவை
LANKA CARGO WORLDWIDE EXPRESS
315, Kasthuriyar Veethy, Jaffna. (4401)
Tel : 076 485 4092



விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை (C-308)



இன்று 01 ஆவது அகவையை பூர்த்தி செய்து 02 ஆவது அகவையில் கால்பதிக்கும்
வீனஸ் விசேட வைத்தியசாலை
T.P : 021 222 4172, 021 222 8470
19.10.2020 ( இன்று ) எமது வைத்தியசாலைக்கு வருகைதரும் அனைத்து நோயாளர்களுக்கும் இலவச உபசரணைகள் வழங்கப்படும்.
விசேட சேவைகளும் விசேட சலுகைகளும்...
தற்போது நிலவும் கொவிட் - 19 அசாதாரன சூழ்நிலையில் வீனஸ் விசேட வைத்தியசாலை தனது வெற்றிகரமான ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு விழாக்களைத் தவிர்த்து எமது மக்களின் நலன் கருதி விசேட சலுகைகளை வழங்குவதில் மிகவும் பெருமை அடைகின்றது.
- அனைத்து இரத்தப் பரிசோதனைகள் (Blood Test ) - 25% Discount
- ஈ.சி.ஜி. பரிசோதனை (ECG) - 25% Discount
- இருதய பரிசோதனை (Healthy Heart Checkup )- Special Discount
- நீரிழிவு நோய் பரிசோதனைகள் (Diabetic Checkup)-Special Discount
- எக்ஸ்றே (X-Ray) - 20% Discount
- ஸ்கானிங் (Scanning) - 20 % Discount on Hospital Charge
- 2D எக்கோ (2D - Echo)-20% Discount in Hospital Charge

அனைத்து சத்திரசிகிச்சைகள் (MAJOR SURGERIES)
- வாட் அறை (Ward Room) - 50% Discount
- இரத்த பரிசோதனைகள் (Blood Checkup)- 25% Discount
- ஈ.சி.ஜி (ECG) & எக்ஸ்றே (X-Ray)- 25% Discount
- ஸ்கானிங் (Scanning)- 25% Discount in Hospital Charge
- சத்திர சிகிச்சைக் கூடக் கட்டணம் (Operation Theature Charge) -25% Discount

அனைத்து வாட் அனுமதிகள் ( WARD ADMISSIONS)
- வாட் அறை (Ward Room) - 50% Discount
- இரத்த பரிசோதனைகள் (Blood Checkup)- 25% Discount
- ஈ.சி.ஜி (ECG) & எக்ஸ்றே (X-Ray)- 25% Discount
- ஸ்கானிங் (Scanning)- 25% Discount in Hospital Charge

ANNIVERSARY CELEBRATIONS 1St ANNIVERSARY

எமது ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு மூன்று மாத காலத்திற்கு "வைத்திய நிபுணத்துவ ஆலோசனை" பெறும் நோயாளர்களில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 15 நோயாளர்களுக்கு " உயிர் காப்பு " கவசமாக 1 மில்லியன் ரூபாய் பெறுமதியான அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்தின் விபத்து காப்புறுதி எங்களால் அன்பளிப்பாக வழங்கப்படும்.






136, Palaly Rd, Kanthermadam, Jaffna. (200m Distance From Kandarmadam junction)
136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். ( கந்தர்மடச் சந்தியிலிருந்து யாழ். நோக்கி 200 m தூரத்தில்) (C-544)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.